தனிப்பிரதி விலை அணா 0—1—6
Reg. No. M 3066. 1936-அக்டோபர் 1.
PAHUTHARIVU ("REASON")
மலர் 2. இதழ் 6

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.

தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்

சந்தாதாரர், பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை.

விஷயம்	பக்கம்
மதம் (பாட்டு) (மு. த. வேலாயுதம்)	1
நவராத்திரி அல்லது ஒன்பது இரவு (கைவல்யசாமியார்)	3
உயிர்வாழ்விற்கு லக்ஷ்யமுண்டா?	13
மதங்களும் அவைகளின் பலன்களும் (பா.ஜி. செ. நரசிம்மன் எம். ஏ)	22
விஞ்ஞான அதிசயங்கள்	29
சம்பாஷணை (காரதர்)	31
மனிதனும் விடுதலையும் (ரபினர் டிபோர்வோட்)	34
புட்டுக்கட்டை (வயஸ்)	41
தலைவிதி, புநர்ஜென்மம், கர்மம். (விருதை விதுரன்)	43
வேதங்கள் (தி. கோ. கா)	52
பிரிட்டிஷார் ஆளும் பிரஜைகள்	60
மேல்நாட்டு விவாகம்	62

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 2. } ஈரோடு 1936 அக்டோபர் 1. { இதழ் 6.

மதம்.

(மு. த. வேலாயுதம்)

(1) மதமெனும் மதயானையாலே—நீவிர்
மாளாச் சண்டைசெய்ய லாமோ?
நிதமும் விகற்ப மெனிலோ—அதில்
சேருங் குறைகம தலவோ?

(2) மதமெனும் காமத்தா லந்தோ!—முன்னர்
மாண்டிட்டார்! மாண்புடன் சமணர்
அதஞ்செய் மதத்தைநீ ரிப்போ—நன்றாய்
ஆழப் புதைத்திடு வீர்காள்!

(3) பண்டை மதப்போரி னாலே—உயிர்
பலிகொடுத்தார் புவி மேலே
சண்டை நடப்பதைப் பார்த்தும்—மதம்
சாதிக்க வல்லதென் பீரோ?

(4) தீண்டப் படாதெனச் சாற்றும்—மதம்
தீங்கிழைப் பதையே காணீர்!
வேண்டாம் கொடுமதப் பித்து—மேலும்
வீணர்க ளாவீ ரிச்சித்து!

(5) பாலொடு தேன்கலந் தாற்போல்—பசும்
பாவையின் ஆருயிர்க் கணவர்
ஞாலத்தில் ஆவிநீத் தாலோ—மதம்
நங்கையைத் தண்டிப்ப தேனோ?

(6) வயது முதிர்ந்து தளர்ந்தே—உடல்
வாடிய கிழவனுக் கந்தோ!
நியமக் கலியாணஞ் செய்தால்—அந்த
நியாயமேன் பெண்களுக் கில்லை?

(7) நாட்டைக் கெடுத்தது மதமாம்! சுய
நலமிகள் தோற்றிய மதமாம்!
கேட்டை யளித்தது மதமாம்! இங்கு
கெடுதல் புரிந்ததும் மதமாம்!

(8) ஒற்றுமை கொண்டோம் வாழ்வோம்—மதம்
ஓடிப் பறந்திடும் பாரீர்!
அற்றிடும் வேற்றுமை யின்றே—பணி
அன்புட னாற்றுவோம் வாரீர்!

கிரேட் பிரிட்டனில் கள்ளத்தனமான சேர்க்கையால் வருடம் ஒன்றுக்கு 25 ஆயிரம் அநாமதேயக் குழந்தைகள் பிறக்கின்றனவாம். அதனால்தான் அவர்கள் உல்கையாளும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள் போலும்!

நவராத்திரி அல்லது ஒன்பது இரவு.

(கைவல்யசாமியார்)

நவராத்திரி என்ற பதம் ஒன்பது இரவு எனப் பொருள்படும். இது புரட்டாசி அமாவாசைக்குப் பின் உள்ள நவமியை இறுதியாக உடைய ஒன்பது நாட்கள் இரவிலும் கொண்டாடப்படும் உத்ஸவம். இது சில வருஷங்களில் ஐப்பசி மாதத்துள்ளும் வரும். இந் நாட்களின் ஆரம்பத்தில் எல்லோர் வீட்டிலும் அவரவர்கள் நிலைக்கேற்ப பொம்மைகள், கடவுளின் உருவமான படங்கள் வைத்து ஒவ்வொரு சாயங்காலமும் ஒன்பது நாள் வரையிலும் பாட்டு முதலியவை பாடி ஆலாத்தி முதலியவைகளைச் சுற்றி இந்த உத்ஸவத்தை பெண்கள் கொண்டாடுவது வழக்கம். இதில் புருஷர்கள் கொலு முதலியவைகளைக் கவனியாவிட்டாலும் நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள். தேவ பாராயணம், சூரிய நமஸ்காரம், முதலியவைகளை நடத்த பார்ப்பனர்களை ஏற்படுத்தி இந்த ஒன்பது நாளில் தமது வீடு வேத கோஷத்தால் நிறைந்து மங்களகரமாகும்படியாகச் செய்யவேண்டுமாம். ஆனால் இந்த விதி பார்ப்பானுக்கும் அதிகாரம் படைத்த ராஜாக்களுக்கும் பணம்படைத்த வைசியனுக்கும் மாத்திரமாம்; மற்றவர்கள் பக்தியோடு சுந்தரகாண்ட பாராயணம் செய்துமுடித்து பார்ப்பனனுக்கு சாப்பாடு தக்ஷணை கொடுத்து ஆசீர்வாதம் பெறவேண்டுமாம்.

கொண்டாடும் விதம்.

நவராத்திரியில் கடைசி நாளாகிய நவமி தினத்தில் புருஷர்கள் தமது வீட்டிலிருக்கும் புஸ்தகங்களை ஒழுங்காக அடுக்கிவைத்து காலை முதல் உபவாசமிருந்து சரஸ்வதியைப் பூசை செய்யவேண்டும். இந்த நவமி அன்றையத் தினமாவது அல்லது அடுத்த தினமாவது தொழிலாளிகள், ஆயுதத்தையுடையவர்கள் ஆகியவர்கள் தங்கள் தங்கள் ஆயுதங்களை வைத்துப் பூசை செய்வது வழக்கம். அதனாலேயே இந்த பூசைக்கு ஆயுதபூசை என்றொரு பேரும்

உண்டு. இந்த நவராத்திரியை இந்துமதப் பிரிவுகள் என்று சொல்லும் எல்லா மதஸ்தர்களும் கொண்டாடுகிறார்கள். அன்றியும் சிவ விஷ்ணு ஆலயங்களிலும் இதை பெரும் உத்ஸவமாகவும் கொண்டாடுகிறார்கள். அங்கு அம்மனை அலங்கரித்து அநேக தீப அலங்காரங்கள் செய்து ஒன்பதுநாள் இரவும் ஆராதனை நடத்துவார்கள். இந்த வேடிக்கைகளைப் பார்க்கவே அநேகர் கைகூருக்குப் போவது வழக்கம். இதனால் கடவுள் பக்தி என்னும் தொழிலையுடைய பார்ப்பனரும் இவ்வுத்ஸவத்தால் தங்களுக்கு இலாபம் இருப்பதால் அவர்களே ஊரூராய் நவராத்திரி உத்ஸவத்தைப்பற்றி விளம்பரப்படுத்துவார்கள். நிற்க, இதை சைவர், சுமார்த்தர், வைஷ்ணவர், மாத்வர் முதலிய எல்லா மதஸ்தர்களும் கொண்டாடக் காரண மென்னவென்றால் கல்வியும் ஆயுதமும் எல்லாருக்கும் பொதுவானதாலும் ஆயுதமும் அதற்கு கற்பிக்கப்பட்ட தேவதையான துர்க்கை, ஸரஸ்வதி, லக்ஷ்மி என்று சொல்லப்பட்டவர்கள் ஒவ்வொரு மதத்தினுடைய தெய்வங்களின் அம்மன்களானதினாலும், இந்து மதஸ்தர்களுக்கெல்லாம் இது சம்மந்தப்படுத்தப்பட்ட புராணக்கதைகளிருப்பதாலுமேயாகும். துர்க்கை முதலிய அம்மன்களை வைஷ்ணவர்கள் பூசிக்காவிட்டாலும் இது சம்மந்தமான கதைகள் அவர்களிடையுமுண்டு. மற்றவர்கள் சரஸ்வதி பூஜையன்று "துர்க்காலக்ஷ்மீ ஸரஸ்வதீப்யோ நம" என்று கூறி பூஜை தொடங்குவார்கள்.

சைவ ஸ்மார்த்த புராணக் கதை.

முன்னொரு காலத்தில் மகிஷாசூரன் என்ற எருமை ரூபமான அசுரனும் அவன் பரிவாரங்களும் விருத்தியாகி கடவுள் வரத்தால் சிறந்த பதவியை அடைந்து உலகை இம்சித்துக்கொண்டிருந்ததால் இந்த கஷ்டம் பொறுக்க முடியாமல் தேவர்கள் பார்வதியிடம் முறையிட, பார்வதி ஒன்பது நாள் சிவபிரானைக் குறித்து தவமிருந்து அவரிடமிருந்து தகுந்த சக்திபெற்று ஒன்பதாம் நாள் மகிஷாசூரனைக் கொன்று அவன் பரிவாரங்களை நாசம் செய்து சாந்தமடைந்தார். மகிஷா சூரனைக் கொன்றதினால் பார்வதி தேவிக்கு மகிஷாசூர மர்த்தனி என்கிற பெயரும் வந்தது என்பது. எனவே இந்தக் கதையின் ஆதாரத்தைக்கொண்டு அம்மன் தவமிருந்து விழித்த ஒன்பதாம் நாள் வேண்டிய வரங்கள் கொடுப்பார் என்னும் கருத்தைக்கொண்டே இவர்கள் இந்த உத்ஸவத்தைக் கொண்டாடுகிறார்கள்,

நம்முடைய உத்ஸவத்திற்கும் மூட நம்பிக்கைகளுக்கும், புராணக் கதைகளுக்கும் பாமரர்களே பங்காளிகள். படித்தவர்களுக்கு

இதில் வயிறு வளர்க்கும் பிரத்தியக்ஷ அனுகூலமிருந்தாலும் கூட இதுபோன்ற கதைகளைப் பற்றிய விவகாரங்கள் எழும்போது "தங்களுக்கெல்லாம் வேறு கருத்தே இதில் பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள்" என்று எதற்கும் "தத்துவ" நியாயம் சொல்லுவதுபோல் இதற்கும் ஒரு ரகசிய அர்த்தமுண்டாம். வேத பாராயணம், கோவிலில் நடக்கும் பூசை, ஆராதனைகள், ஒன்பது நாளும் பார்ப்பானுக்கு போடும் சோறு, அம்மன் விழித்த உடன் செய்யும் தானம் முதலியவைகளால் பாமரர்களுக்கு இகலோக சுகம் சித்திக்க வேண்டுமாம். அதனால் மனம் சுத்தப்பட்டு பின்னால் மோக்ஷத்திற்கு வருவார்களாம். படித்த பண்டிதர்கள் இந்த ஆடம்பரத்தில் சோறும் தக்ஷணையும் வாங்கிக்கொண்டாலும் அவர்கள் சொல்லும் உள் கருத்தென்னவென்றால் மகிஷாசுரன் அவன் பரிவாரங்கள் முதலியவைகள் என்பதை அஞ்ஞானமாகவும் அதன் காரியங்களுமாகவும், பார்வதியை சித்சக்தியாகவும், அது பரம்பொருளாகிய ஆத்மஸாக்ஷாத்கார விசேடத்தால் அஞ்ஞானத்தை வேரறுப்பதாகவும் கொள்ளவேண்டுமாம். "துர்க்கா லக்ஷ்மீ சரஸ்வதீப்யோ நம." என்னும் மந்திரத்தை பார்ப்பானிலிருந்து அம்மனையே பிரதானமாகப் பூசிக்கும் சங்கரமடத்து சாஸ்திரிகள் வரையிலும், மக்களிடமிருந்து கிடைக்கும் வரையிலும் தங்கள் லௌகிக சுகத்திற்காக அவர்களை வேரறுக்கிறார்களே ஒழிய அவர்களது அஞ்ஞானத்தை வேரறுப்பதாக தத்துவார்த்தம் சொல்லும் சமயவாதிகளெல்லாம் மகிஷாசுரனிடமல்லவா (அதாவது ஆசையில்) மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

வைஷ்ணவ மாத்வர்கள் புராணக் கதை

முன்னொரு காலத்தில் லக்ஷ்மி தேவி உலகில் அலமேலு மங்கையாக வந்து பரமபத வாசியாகிய விஷ்ணுவான திருப்பதி பெருமாளை யடைந்து ஆனந்திக்க இந்த ஒன்பது நாள் தவமிருந்தாராம். இதன் முடிவில் அவர் எண்ணம் முற்று பெற விவாகம் பெரிய ஆடம்பரமாக முடிந்ததாம். இந்த விசேடத்தை முன்னிட்டுத்தான் வைணவ மாத்வர்கள் இந் நாளை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந் நாட்களில் திருப்பதியில் பிரம்மோத்ஸவம் நடக்கிறது. பிரமாவின் பத்தினியான சரஸ்வதியும் இந்த நவராத்திரியில் தன் நாயகனை அடைந்து நிலைபெற தவமிருந்தாள் என்னும் கதையைக்கொண்டு கடைசி மூன்று நாளும் சரஸ்வதிக்கு முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. பத்தாம் நாள் விஜய தசமியன்று சரஸ்வதி தவம் முடிந்து சந்துஷ்டியாயிருப்பதால் அன்று வாசிப்போருக்கு கல்வி நன்றாக வருமாம். தொழில் செய்பவர்கட்கு காரியங்கள் கைகூடி வருமாம்.

இதை நம்பி நடக்கும் நம்மைவிட மற்ற தேசங்களிலெல்லாம் சரஸ்வதி எந்நாளும் திருப்தி யோடுகூடின சந்தோஷத்துடன் இருக்கிறாள். நம் தேசத்தில் வருஷத்திற்கு ஒரு நாள்தான் கண்ணைத் திறந்து திருப்தி படுகிறாள். இதற்குக்காரணம் பார்ப்பானுக்குக் கொடுப்பது சரியாகக் கொடுக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்காகவோ, அல்லது பூஜையின் திருப்திக் குறைவாலோ, அல்லது நம்மிடம் ஆயிரமாயிர வருஷமாக வாங்கி உண்ட நன்றிகெட்ட குணத்தை மறைப்பதற்காகவோ, அல்லது தன் பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தை தன் முதற் பிள்ளைகள் மற்ற பிள்ளைகளுக்கு எங்கே சொல்லி வைத்து விடுவார்களோ என்னும் அஞ்ஞானத்தாலோ என்பதை நாம் அறியோம்.

இன்னுமொரு கதை.

கிரேதாயுகத்தில் சுகேது என்னும் ஒரு அரசன் இருந்ததாகவும், அவன் சத்துருக்களால் அடிபட்டு காட்டையடைந்து காயத்தாலும் பசிப்பிணியாலும் நோய் வாய்ப்பட்டு அவதிப்பட்டதாகவும் அங்கு வந்த அங்கிரஸ் என்னும் ரிஷி அரசன் பெண்ஜாதியான சுவேதி என்பவளுக்கு லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி, இவர்கள் செய்த மாதிரி நீயும் தவம் செய்வாய் என்று இந்த பூஜையை உபதேசித்ததாகவும் அவ்வாறே அவள் செய்து அங்கிரஸ் என்னும் புத்திரனும் பிறந்து அவன் சத்துருக்களை ஜெயித்து தகப்பனுக்கு ராஜ்யத்தை வாங்கிக்கொடுத்ததாகவும் சொல்லப்படுகின்றது. நவராத்திரிக்கு இன்னும் இது போன்ற பல கதைகளுமுண்டு.

கிரேதாயுகம் முதற்கொண்டு இதுநாள் பரியந்தம் செய்த பூஜைகளின் மந்திரங்களும் அதைச் செய்த ஜன சமூகங்களும் நம் நாடும் அதை ஏற்றுக்கொண்ட தெய்வங்களும் நூறுநூறு வருஷங்களாக அந்நியர் படை எடுப்பால் சின்னாபின்னப்பட்டு வெள்ளைக்கார மந்திரத்தால் வெளியேற்றப்பட்டிருக்கையில் நமது "சரஸ்வதியும், லக்ஷ்மியும், பார்வதியும்" அவர்களுக்குப்பூஜையும் அதற்காகப் பார்ப்பனனுக்குப் பணமும், தக்ஷணையும் என்று "குடி அரசு" கேட்டு விட்டால் சமயவாதியும் சாஸ்திரவாதியும் 'அது சமயத்தை அடியோடு தூஷிக்கின்றது' என்று சொல்லுவதானாலும் படித்தவர்கள் என்பவர்களான ஆங்கில சரித்திர நைசன்ஸ் பி. ஏ., எம். ஏ. வாதிகளுக்குப் புத்தி இருக்கின்றதா இல்லையா? என்றுதான் கேட்கின்றோம்.

மேலும் விஜய தசமியன்று சிவன் கோயிலில் பரிவேட்டை உத்ஸவம் என்பதாக ஒன்று நடத்துகின்ற வழக்கமு முண்டு. அன்று "பகவான்" எழுந்தருளி வன்னி மரத்தில் அம்பு போடுவது வழக்கம். வன்னி மரத்தில் நெருப்பிருக்கிறதாம்; அதில் அம்பு பாய்ச்சினால் அந்த வேகத்தால் நெருப்புண்டாகி அந்த மரத்தை எரித்து விடுமாம். ஆனதால் வேட்டையாடுவோருக்கும், ராஜாக்களுக்கும் எளிதில் ஜெயத்தைக் கொடுக்குமாம். இந்தக் காரணத்தால் இந்த வேட்டை தினத்திற்கு விஜயதசமி அதாவது ஜெயத்தைக் கொடுக்கும் நாள் என்று பெயர் என்றாலும் இதற்கும் உள்கருத்துண்டாம். உள்கருத்து வைத்து வைத்துத் தான் நம் நாடு உள்ளேயே போயிற்று. பாமரர்களுக்கு உள் கருத்து ஸ்தூலமாகவும், படித்தவர்களுக்கு சூக்ஷமமாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். (எந்த சூக்ஷமமும் பாமரர்களைப் படித்தவன் ஏமாற்றவே உபயோகப்படுகிறதே ஒழிய காரியத்திற்கு ஒன்றும் உபயோகப்படுவதில்லை) அதாவது நெருப்பிடலாகிய வன்னிமரத்தையே ஆத்மாவோடு கூடிய தேகமாகவும் அம்பை ஞானமாகவும் வேட்டையில் அம்பு விடுவதை ஞானோபதேசமாகவும் மரம் எரிந்து விழுவதை கருமசம்பந்தமானவைகளை ஞானத்தணல் சுட்டு வெண்ணீறாக்குவதாகவும் கொள்ள வேண்டுமென்பார்கள். இந்த உள் கருத்து உபதேசம் கேட்டுத்தான் ராஜ வம்சமெல்லாம் நடுத்தெருவில் நின்றதான வட தேசத்துக் கதைகள் அநேகம். மைசூர் மகாராஜா பரிவேட்டையால் ஐகருக்கு அடிமையானார். ஆனால் வெள்ளைக்காரப் பரிவேட்டைதான் அதை விடுவித்துக்கொடுத்தது. தஞ்சாவூர் ராஜா செய்த சரஸ்வதிபூஜையும் கூடிய பரிவேட்டையும் சரஸ்வதி மாலில் அடுக்கி வைத்த குப்பை கூள ஏடுகளும் ஆயுதங்களும் முன் வாசலில் துளசியைக் கொட்டி விட்டு புறவடை வாயில் ராஜாவை ஓடச் செய்து விட்டது. அதுபோலவே டிப்புகாலத்தில் திருவனந்தபுரத்து ராஜாவிற்கு வெள்ளைக்காரர்கள் அபயம் கொடுத்தார்களே ஒழிய சரஸ்வதி பூஜையும் பரிவேட்டையும் ஒன்றும் செய்யவே இல்லை. அந்தப்படி அபயம் கொடுத்திராவிட்டால் அனந்த சயன பிரபுவும் அவர் பெண்ஜாதியும் அவர் மருமகளும் ஓடிப்போய் அன்றோ இருக்க வேண்டும். அனந்த சயனப்பிரபு பின்னும் ஓடி வந்து தங்கள் சொத்தென்று அங்கு சயனித்துக் கொண்டிருப்பதாக இப்பொழுதும் சொல்லுகிறார்கள். இந்த பிரத்தியக்ஷ அனுபோகத்தை 'குடி அரசு' சொன்னால் அது கடவுளை தூஷிக்கிற பத்திரிகையாய் விடுகிறது.

கடவுளையும் பெரியவர்களையும் தூஷிக்கிறவர்கள் காட்டும் ஆதாரங்களையும் அதன் நியாயவாதங்களையும் கூட்டி ஆலோசியுங்கள். சரஸ்வதியைக் கொலுவிருத்தி பெரிய உத்ஸவங்கள் செய்யும்

நமது நாட்டில் ஆயிரத்துக்கு 50 பேருக்குக்கூட கல்வியில்லை. சரஸ்வதியே இல்லாத நாட்டில் ஆயிரத்திற்கு 996 பெயர்கள் கல்வி கற்றவர்களாக விருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன? ஆயிரம்பேருள் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் மற்றெல்லா தேசங்களில் கல்வி கற்றவர்களாய் விளங்குகின்றார்கள் என்கிற குறிப்புகளைக் கீழே குறிப்பிடுகிறேன்.

	ஆண்	பெண்
பிரிட்டானியா	932	912
அமெரிக்கா	955	930
பிரான்ஸ்	965	940
ஜெர்மன்	990	980
டென்மார்க்கு	996	995
ஜப்பான்	985	966
இந்தியா	50	12

நமது நாட்டில் ஆணும், பெண்ணும் சேர்ந்து கல்வி கற்றவர்கள் ஆயிரத்திற்கு 62 பேர்களேயிருக்கிறார்கள். இதில் குமஸ்தா வேலைக்குப் போகும் கல்வியும், விவகாரங்களை உற்பத்தி செய்யும் வக்கீல் கல்வியும், சமயத்தின் மூட நம்பிக்கைகளை உண்டுபண்ணும் கல்வியும், தங்கள் உயர்விற்கும், ஜீவனத்திற்கும் கடவுள் பெயரைச்சொல்லி சமூகங்களை ஏமாற்றும் கல்வியும் உயர்ந்த ஜாதியென்னும் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள மற்ற சமூகங்கள் அடிமையென்றும் பஞ்சமர் என்றும் பாட்டுப்பாடும் கல்வியையும் தள்ளினால் அறிவிற்கும் பொதுஜன உபயோகத்திற்கும் உள்ள கல்வியை கற்றவர்கள் அதினும் சொற்பம் தானே.

நாம் சரஸ்வதிக்கு செய்த தொண்டு சாமானியமல்லவே. ஒரு ஏட்டைக் கிழிக்கோம், ஒரு எழுத்தை மிதியோம், இரைந்துகிடக்கும் இதழில் துப்போம், படித்த ஒரு பழைய ஏட்டையும் வீசி எறியோம், கால்பட்டால் தொட்டுக் கும்பிடுவோம், கைபட்டால் கண்ணில் ஒத்திக்கொள்ளுவோம், எந்த ஏட்டிற்கும் காப்புச்சொல்லுவோம். செல்லரித்த ஏட்டையும் 'புண்ணிய தீர்த்த'த்தில் கொண்டு போய் போடுவோமே ஒழிய தெருவில் போடோம். கற்றவர் நாவின் கருத்தும் கம்பன் கவிதிறமும் அவளே என்போம். இத்தனையும் போதாமல் வருஷம் ஒருதரம பத்து நாள் பள்ளியறையில் வைத்து படைத்துக் கும்பிடவும் செய்கிறோம். இத்தனையும் நாம் இங்கு செய்ய இந்த சரஸ்வதி கொஞ்சமும்

நன்றி விசுவாசம் இல்லாமல் மேனாட்டில் குடிபுகுந்த காரண மென்ன வென்பதை நேயர்கள் சரஸ்வதியையே கேட்கட்டும். ஏ சரஸ்வதி! மேனாட்டில் உனக்கு என்ன மரியாதை இருக்கிறது? உன்னைப்படித்து எறிகிறார்கள், காலில் மிதிக்கிறார்கள், செருப் புக் கட்டுகிறார்கள், மலம் துடைக்கிறார்கள், உன் பேர் சொல்லுவதில்லை, நீ ஒருத்தி இருக்கின்றாய் என்று கூட நினைப்பதில்லை. உனக்கு பூசையில்லை, புருஷனில் லை, வீணையில்லை, எல்லா வித்தைக்கும் அவர்கள் தாங்களே எஜமானர்கள் என்கிறார்கள். எனவே நீ செய்வது நியாயமா குமா என்று நாங்கள் சொல்லி விட்டால் உன் பாஷையான சமஸ் கிருத இலக்கணத்தை எங்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படா தென்று நீ சொன்னதாகச் சொல்லும் சாஸ்திரமோ எங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லுகிறார்கள். உன் மூத்த பிள்ளை யான பார்ப்பனர்களின் தாசிப்பிள்ளை—அடிமை—வேலையாள்—ஒழுக்க மற்றவன்—என்று எங்களில் படித்த உணர்ச்சிபெற்ற பண்டி தர்களையும் கூட நீ சொல்லியிருப்பதாக உன் மூத்த பிள்ளைகள் சொல்லும் ஏட்டைக்கூட கிழித்தெறியாமல் சற்றும் விசுவாச மற்றுப் போனாயே என்று நாங்கள் சொல்லி விட்டால் தூஷித்த வர்களாகிவிடுவோமா? நீயே சொல்லு.

நீ வாசம் செய்யும் மேனாட்டில் உனக்கு பூசையில்லை, நைவேத்தியமில்லை, பூசாரி குருக்களுக்குக் காணிக்கையுமில்லை. பஞ்சமும் படியாமையுமுடைய இந்த நாட்டின் பேரில் மாத்திரம் உனக்கு வந்த வயிற்றெரிச்சல் என்ன? உன் மூத்தபிள்ளைகளுக் கெல்லாம் உன் பேராலேயே அளித்தளித்து ஆண்டியானோமே என்று நாங்கள் சொல்லுவதாலேயே உன் பக்த கோடிகள் உன் புருஷனுடைய பிரமலோகத்திற்கும் உன் மாமனுடைய வைகுண் டத்திற்கும் உன் பாட்டனும் மகனுமான சிவனுடைய கைலாசத் திற்கும் போகும் கதவுகளை நாங்கள் (சமயதூஷணையால்) சாத் தினவர்களாய் விடுகிறோமாம். நீயும் உன் குடும்பத்துப் பெண் களும் குடிபோயிருக்கும் நாட்டில் உங்கள் புருஷர்களுக்கு கோவில் கிடையாது; கும்பாபிஷேகமில்லை. அப்படியிருக்க நீங்களில்லாத நாட்டில் உங்களுக்கு கோவிலும் கும்பாபிஷேகமும் பூஜையும் எதற்கு? இருக்கிற கோவில்களில் நீங்கள் குடியிருந்தால் போதாதோ? காணிக்கையும் நிறுத்தி கும்பாபிஷேகத்தையும் விட்டு கோவிலுக் கெழுதி வைப்பதையும் நிறுத்தி பணத்தையெல்லாம் படிப்பிற்கே வைத்து விட்டுப் போங்களென்றால், பாமரர்களுக்காக ஏற்பாடு செய்து வைத்த சமய ஒழுக்கங்களையெல்லாம் கெடுத்து மோட்சவாசலை அடைக்கும் தூசர்களென்று எங்களை ராஜீயவாதி கள் கூடச் சொல்லலாமா? ஆசாரிகளுக்கும் குருக்களுக்கும் அதைச்

சேர்ந்த பார்ப்பனர்களுக்கும் கொடுப்பதை நிறுத்திவிட்டு பக்கத்து ஏழைக்கு படிப்பும் தொழிலும் கற்பியுங்களென்றால் ஆச்சாரிகளையும் பெரியவர்களையும் நாங்கள் குற்றம் சொல்லுகிறவர்களாகி விடுவோமா? அறுப்பறுக்கும் காலத்தில் கருக்கரிவாள் கூட ஒரு மூலையில் கவலையற்று தூங்குகிறதே. வருணபகவானுக்கும் சூரியபகவானுக்கும் ஏற்பட்ட சண்டையால் வருணபகவான் முறியடிக்கப்பட்டு ஓடி மறைந்துவிட்டானே. சூரியனே இப்போது கழனியில் உள்ள எல்லாவற்றையும் காய்ந்து தொலைத்து விட்டானே. உன் ஆயுதங்களுக்கு காட்டிலும் கழனியிலும் கூட வேலை இல்லையென்றால் பின்னை கருமார் வீட்டிலும் வேலை என்ன? எனவே வேலையில்லா ஆயுதத்திற்குப் பூசை ஏன்?

இப்பொழுது மைசூர் ராஜ்யத்தில் நடக்கும் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, முதலியவர்களின் பூசைகளான, தசராப் பண்டிகைக்குச் செலவாகும் பணத்திற்கு அளவுண்டோ! முன் மைசூர் ராஜா சுயாதிபதியாக அரசாண்ட காலத்தில் சரஸ்வதி பூசைக்குச் செலவு செய்த பணத்திற்கு அளவும் எல்லையுமிருக்காது. அப்படியிருக்கையில் சங்கராச்சாரியின் மடங்களுக்கெல்லாம் முதன்மையான சாரதாமடம் மைசூரிலென்றும், சங்கராச்சாரி அம்மனை அங்கு பிரதிஷ்டை பண்ணித்தான் பூசித்தாரென்றும், மைசூர் ராஜ குடும்பத்திற்கு அம்மனே குலதெய்வமென்றும், சங்கராச்சாரிகளும் மைசூர் ராஜகுடும்பங்களும் அந்த அம்மனை பூசிக்கையிலும், பண்டிகை கொண்டாடுகையிலும் பிராமண போஜனம், தக்ஷணை, தானம், வேள்வி, முதலியன செய்து வந்தார்களென்றும் நாம் தெரிந்திருக்கிறோம். இப்பொழுதும் அநேகம் நடப்பதையும் பார்க்கிறோம். அந்த காலத்தில் மைசூரில் குடி புகுந்திருந்த ஐதராலி என்பவரால் மைசூர் ராஜ்யம் அபகரிக்கப்பட்டு மைசூர் ராஜவம்சமும் துரத்தப்பட்டு சாரதாதேவியும் ஓடி ஒளிந்ததையும் தெரிந்தோம். அதற்குப் பின் வெள்ளைக்காரர்களால் மைசூர் ராஜ்யம் ஜெயிக்கப்பட்டு பழய ராஜ பரம்பரைக்குக் கொடுக்கப் பட்டதையும் கண்டோம்.

அதுவரையிலும் பார்வதி, சரஸ்வதி, லக்ஷ்மிக்குச் செய்த பூஜை எல்லாம் என்னவாயிற்று? எங்கே போய்ச் சேர்ந்தது? நம்மிடை அவர்களிருந்தால் அந்தப் பூசைகளை ஏற்றுக்கொண்டிருப்பார்களே. அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் அதனால் நாம் பலனும் கண்டிருப்போமே. சங்கராச்சாரிக்கும் அவர்கள் கூட்டத்தாருக்கும் சாரதா தேவிக்கும் போட்ட படையலெல்லாம் தேவர்கள் உண்டது உண்மையானால் நமக்குப் பிரதிபலன் ஒன்றும் காணோமே. பிரத்தியட்சத்தில் நன்றி கெட்ட

தேவர்களுக்கு இனிப்போடும் படையலால் நமக்கு என்ன நன்மை வரும்? ஏட்டில் தான் பலன் நீட்டி நீட்டி எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய யுக்திக்கும் அனுபவத்திற்கும் அநேக காலமாக ஒத்து வருவதில்லையே. யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்து வாராத சாஸ்திரிகளைத் தள்ளி விட வேண்டுமென்றல்லவா மனிதனுடைய சிந்தனா சக்தியும் அதைத் தெரிந்த பெரியவர்களும் சொல்லுகிறார்கள். பார்வதிக்குப் பரிந்து வரும் வைஷ்ணவர்களும் சரஸ்வதிக்குச் சலுகை காட்டும் சமார்த்தர்களும் சற்று கவனித்துப் பார்த்தபின் சண்டைக்கு வாருங்கள். சரஸ்வதி பார்வதி இவர்கள் உண்டா? இல்லையா? என்பதல்ல இங்கு வாதம். அவர்களை தூஷிப்பதுமல்ல. "சரஸ்வதி என்றால் அறிவும், லக்ஷ்மி என்றால் உலகத்தின் சாமக்கிரிகைகளும், துர்க்கை யென்றால் உலகத்தின் நாசமும் ஆகும்" என்பதான அர்த்தங்களையும் நாங்களுமறிவோம். அநேக ஆயிரவருஷங்களாக அவர்கள் பேரைக் காட்டி நாம் செய்து வரும் கிரிகை, சடங்கு, பூசை, பிராமண போஜனம், தக்ஷணை, தானம் இவைகளின் பலனென்ன? அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு நமக்குச் செய்த நன்மை என்ன? அவர்கள் அதை ஏற்றிருந்தால் வெள்ளைக்காரர்களின் உதவியால் நம் நாட்டில் அவர்கள் குடியிருக்கக் காரணமென்ன? ஏற்றுக்கொள்ளாமலிருந்தால் அதைத் திருத்தி அமைக்க வேண்டாமா? என்பதே இங்குள்ள வாதம்.

இதைப்பின்பற்றிப் பிரபுக்களும் ஜெமீன்தார்களும் சரஸ்வதி பூசை, ஆயுதபூசை கொண்டாடுகிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் வேண்டிய விருந்துகளும் தானங்களும் நடக்கின்றன. இந்த பூசையைப் பெற்றுக்கொள்ளும் சரஸ்வதி இவர்களுக்கு தன்னுடைய வித்தையையும் அதனால் தன் நாட்டிற்கு வேண்டிய தொழில் முறைகளையும் கற்பிக்காமல் மேனாட்டு பழக்க வழக்கங்களை கற்பித்து அதனால் தங்கள் பொருள்களை மேனாட்டு சாமான்களுக்கு விரையம் செய்யச் செய்து இவர்களை ஏழைகளாக்குவதையே பார்க்கிறோம். வீண் ஆடம்பரங்களுக்கும் சங்கீதப் பாட்டுக்கச்சேரிக்கும் விருந்தின் பெருமைக்கும் விரையம் செய்யும் ஒவ்வொரு வருஷத்துப் பணங்களை கொண்டு நான்கு ஏழைப்பையன்களுக்காவது கல்வியும் தொழிலும் கற்பித்தால் சரஸ்வதி திருப்திப்படுவாள் என்பதே நியாயமாக விருக்கும்.

ஜப்பான் சிறிது காலத்திற்கு முன் தங்களூர் மாணவர்களை மேனாட்டிற்கு அனுப்பி சரஸ்வதியைக் கொண்டு வந்து தங்களூரைச் சுத்தம் செய்ய, லக்ஷ்மிதானே அங்கு குடி ஏறிவிட்டாள். துருக்கியோ தனது தேச சரஸ்வதியின் பாஷைகூட

உதவாதென்று எழுத்தைக்கூட மாற்றி விட்டதாகப் பத்திரிகையில் படிக்கிறோம். மேனாடு சுற்றி வந்த ஆப்கன் தேசமோ அநேக மாணவர்களை மேனாடு போய் சரஸ்வதியைக்கூட்டி வர அனுப்பி விட்டது. சரஸ்வதியைக் கூட்டி வரப்போகும் மாணாக்கர்களை முத்தம் கொடுத்தனுப்பினார்களாம். இவர்களன்றோ சரஸ்வதி. சரஸ்வதியின் அன்பும் அதனாலல்லோ விளங்கும். இனி அந்த லக்ஷ்மியும் ஏன் கூட போகமாட்டாள்?

நம் தேசத்தில் அவ்வித அன்புடைய சரஸ்வதி யுண்டா? ஏட்டிலும் பண்டிதர்களின் வார்த்தையிலும் இருப்பது காரியத்திற்கு உதவுமோ? காரியத்திலிருந்தால் சர்க்கார் உத்திரவு இருந்தும் ஸ்தல அரசாட்சி நமக்கே கொடுக்கப் பட்டும் ஏன் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளியில் சேர்த்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இக்காலத்தில் எல்லா வகையாலும் ஆசைகளும் அவசியங்களும் அதை அடைய விரோதங்களும் வளர்ந்து கொண்டே வருகின்றன. சரித்திரத்தில் பாதியுண்மை காட்டுவது போல பொய்களையும் சிருஷ்டி செய்து நம் நாட்டுத் தாழ்ந்த வகுப்பார்கள் என்று ஒரு பேர் கற்பித்து அவர்களை எப்போதும் இடைவிடாமல் பழித்து அவர்களிடம் விரோத எண்ணங்களை வளரச் செய்வதும் பெரும் பகுதி பொய்யும், மனிதப் பொது நலத்தைக் கருதி விரைவில் மறக்கத் தக்கனவாகிய சம்பவங்களுக்கு ஞாபகச் சின்னம் கட்டி நிறுத்துவது போல நமது மதத்தின் கதைகளும், நமது கடவுளின் பேரால் சொல்லும் சமய ஒழுங்குகளும் இருக்கையில் நாம் முன்னேற்றமடைவதெப்படி?

சரஸ்வதிமாலும் லக்ஷ்மி விலாசமும் பார்வதி மண்டபமும் கட்டி வைத்த தஞ்சாவூர் மகாராஜா குடும்பம் எங்கே? தப்பித் தவறி சிந்தின அந்த வம்சத்திற்கு ஒரு டிப்டி சூப்பரின்டெண்டு வேலைக்குக் கூட எவ்வளவு கஷ்டமாகவிருக்கிறது? காரணமென்ன? வீண் பூசைகளும் கோவில் கும்பாபிஷேகமுமல்லவா! அவர்கள் செய்த பிராமண போஜனமும் தக்ஷணையும் கோவில் பூசையும் என்ன பலனை அளித்தது? சரஸ்வதி பூசையின் கொலுவால் அல்லவா நாயுடுகளின் அரசாட்சி தஞ்சாவூரில் ஒழிந்தது? கிளைவும் டூப்ளேயும் எந்த சரஸ்வதியைப் பூஜித்தார்கள்? அவரவர்கள் முயற்சியும் கடமையும் எந்த கஷ்டத்திலும் செய்து முடிக்கும் தைரியமும் இருந்தால் எல்லா லக்ஷ்மியும் அங்கே வந்து தீர்வார்கள். இதுவே உலக அனுபோகமும் சாஸ்திரத்தின் கருத்துமாகும்.

உயிர் வாழ்விற்கு லக்ஷ்யமுண்டா?

உயிர் வாழ்விற்கு யாதொரு லக்ஷ்யமும் இல்லையென பகுத்தறிவு வாதி தோழர் பெர்சிவார்டு செய்த பிரசங்கம் சென்ற மாதப் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. அதை மறுத்து ஆத்மவாதி தோழர் பிராங்குஹாரிஸ் செய்த பிரசங்கம் பின் வருமாறு:—

தலைவரவர்களே!

சீமான்களே! சீமாட்டிகளே!

35 நிமிஷங்களுக்கு மேல் பேசக்கூடாதென்று தங்கள் தலைவர் கட்டளையிட்டிருக்கிறார். பிரஸ்தாப விவாதத்தைப்பற்றி தோழர் பெர்சிவார்டு என்னிடம் கூறியபோது, விவாத விஷயத்தைப்பற்றி சாங்கோபாங்கமாகப் பேசும் பொருட்டு ஒவ்வொருவரும் பப்பத்து நிமிஷம் ஒருவர் பின் ஒருவராகப் பேசவேண்டுமென்று நான் யோசனை கூறினேன். முன்னாடியே தயார் செய்த பிரசங்கத்தில் ஒருவர் கருத்தை மற்றவர் அறிந்து பூரணமாக விவாதம் நடத்த முடியாது. அத்தகைய பிரசங்கத்தில் விவாதிப்போர் தத்தம் அபிப்பிராயங்களை பரஸ்பரம் சரியாக வெளியிடவும் முடியாது.

உலகம் மாயை, வாழ்க்கை பயனற்றது; கடவுள் ஒன்றில் மடையன் அல்லது பைத்தியகாரன் எனத் தோழர் பெர்சிவார்டு கூறுகிறார். நான் அவருக்கு என்ன விடையளிப்பது? ஒரு சந்தர்ப்பத்தில் காட்டோ கூறிய விடையைத்தான் நான் அளிக்கவேண்டியதாக இருக்கிறது. அவர் என்ன சொன்னார் தெரியுமா? "உயிர்ப் பாரத்தை இறக்க ஐம்பதுக்கு மேற்பட்ட வழிகள் இருக்கின்றன. எனவே உலக வாழ்க்கையைப்பற்றிக் குறைகூறுபவன் ஒரு பயங்காளியே" என அவர் கூறினார். மரணத்தோடு நமது வாழ்க்கையே பூரணமாக முடிவடைந்து விடுகிறதென தோழர் பெர்சிவார்டு நம்புகிறார். மரணத்தோடு நமது தொல்லைகள் எல்லாம் முடி

வடைந்து விடுகின்றனவாம். அந்தத் துன்ப விடுதலையை தோழர் பெர்சிவார்டுக்கு அரை நிமிஷத்தில் பெறமுடியும். எனினும் அவர் அலுத்துப்போய் விட்டதாகவும் அவரை இம்மண்ணுலகத்தில் தோற்றுவித்தவன் ஒரு மடையன் அல்லது கழுதை என்றும் கடவுள் ஒரு பைத்தியகாரன் என்றும் மற்றும் என்னவென்ன வெல்லாமோ கூறுகிறார். கடவுள் எப்படிப்பட்டவனாய் இருந்தால் என்ன? பெர்சிவார்டு அதைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? அவர் நினைத்தால் உலகத் துன்பங்களிலிருந்து அரை நிமிஷத்தில் விடுதலை பெறலாமே! அவரது வாழ்வுக்கு அவரே எஜமான்; அவரது விதிக்கு அவரே கர்த்தா.

என்னை பொருத்தவரையில் வாழ்க்கை இன்ப மயமாகவே இருக்கிறது. உலக வாழ்க்கையைப்பற்றி நான் அலுப்படையவே இல்லை. உலகத்தில் துன்பத்தையே காணும் மனப்பான்மை மஹா மோசமானது; மூடத்தனமானது. வாஸ்தவத்தில் உலக வாழ்க்கை அவ்வளவு துன்பகரமானதல்ல. தற்கால சிந்தனையாளர்களில் ஜெர்மன் தத்துவ ஞானியாண கதே மஹாமேதாவி. அவர் பின் வருமாறு கூறியிருக்கிறார். "உங்கள் சந்தேகங்களையும், பயங்களையும், துன்பங்களையும் நீங்களே அடக்கி வைத்துக்கொள்ளுங்கள். என்னிடமும் எவ்வளவோ சந்தேகங்களும் அச்சங்களும் இருக்கின்றன. ஆனால் உங்களுக்கு ஏதாவது நம்பிக்கைகளும் ஆறுதல்களும் இருந்தால் அவைகளை மற்றவர்களுக்குக் கூறுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் பெரிய பரோபகாரிகள் ஆவீர்கள்."

இந்த விஷயத்தைப்பற்றி விவாதிப்பதே அசம்பாவிதம் என எனக்குத் தோற்றுகிறது. ஏனெனில் அது அவ்வளவு சுளுவான விஷயம். நாமெல்லாம் நமது வாழ்க்கை முறையினாலேயே அவர் கூறுவது பொய்யென பிரதிதினமும் நிரூபித்துக் காட்டுகிறோம்.

எனவே அவர் பக்கம் உட்கார்ந்து அவரைப் பார்த்து இருப்பதைத் தவிர வேறு எனக்கு வேலையில்லை. அவர் கூறுவதற்கு எத்தகைய ஆதாரத்தையுமே என்னால் கண்டு கொள்ள முடியவில்லை.

ஷேக்ஸ்பியரை அவர் உங்களுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார். எனக்கும்கூட ஷேக்ஸ்பியரை ஆதார

மாக எடுத்துக்காட்ட முடியும். "நமது வாழ்நாளை உருப் படுத்தும் ஒரு திவ்ய சக்தி இருந்துகொண்டுதான் இருக்கி றது. நாம் விரும்புகிறபடி அந்த சக்தி நமது வாழ்நாளை உருப்படுத்துகிறது" என ஷேக்ஸ்பியர் கூறுகிறார். பெர்சி வார்டோ "நமது வாழ்நாளை, நமது விருப்பத்தை மதியா மலே, கரடுமுரடாக்கும் ஒரு திவ்ய சக்தி இருக்கிறது" என அதைத் திரித்துக் கூறுகிறார். இந்தப் புது வியாக்கியா னத்தை பெர்சிவார்டுதான் முதன்முதலாக என்னிடம் கூறி னார்.

சூரியன் ஒழிந்து விடுமென்று "சயின்ஸ்" தீர்க்கதரிச னம் செய்திருப்பதாக அவர் கூறுகிறார். சந்திரன் வெறுக் கத்தக்க ஒரு பொருளாம். இவ்வாறு அவர் கூறுவதைப் பார்த்து இரக்கமடையத்தான் வேண்டியிருக்கிறது. நிலா வெறிக்கும் ஒரு இரவாவது அவர் ஒரு பெண்ணுடன் வெளி யில் சஞ்சரித்திருப்பாரா? அவர் பேசுகிறபடி சோகரசமாக வும் ஆபாசமாகவும் என்னால் பேசவே முடியாது.

நாம் எடுத்த இந்த ஜென்மமே துன்ப மயமானதென்று அவர் கூறுகிறார். சோப்பின்ஹாரும் அவ்வாறே கூறி யிருக்கிறாராம். சோப்பின்ஹார் ஒரு பெரிய தத்துவ ஞானி; இத்தலையாளர். அவர் அப்படிக் கூறக் காரணம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. பெண்களைப்பற்றியும் அவர் பேசியிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். "பெண் கள் எல்லாம் குறுங்காலர், சூம்பற்றோளர், தாழி வயிறர்" என்று கூறி பெண்ணழகையே அவர் பழித்திருக்கிறார். அத்தகைய உணர்ச்சியுடைய சோப்பன்ஹார் உயிர் வாழ்க் கையே துன்ப மயமானது என்பதுபற்றி ஆச்சரியப்படுவதற் குண்டா? ஆனால் பெண்களைப்பற்றிய எனது அபிப்பிரா யம் அத்தகையதல்ல. சாமுத்திரிகா லக்ஷணப்படி ரூபவதி களான எத்தனையோ பெண்களை நான் பார்த்திருக்கிறேன். அத்தகைய சுந்தரிகளின் ஒரு முத்தத்துக்கு நான் எத்தகைய துன்பங்களும் அநுபவிக்கத் தயாராகவே இருப்பேன். நான் பெர்சிவார்டை விட 20 வயது மூத்தவன். எனினும் ஒரு பெண்ணின் முத்தம் எனக்கு அவ்வளவு இன்பமயமாக இருக்கிறது.

அவர் கூறும் வாதம் இதுதான். உலக போகங்களை உங்களுக்கு எந்நாளும் அநுபவிக்க முடியாதாதையால் உல கத்தில் பிறப்பதே அநாவசியம் என அவர் கூறுகிறார்.

ஆனால் அநாதிகாலமாக உண்டுகொண்டிருக்க சக்தியுடைய வயிறு நமக்கு இருக்கிறதா? 60 வருஷ காலமாக நான் உண்ட உணவு எனக்குத் திருப்தி அளித்துவிட்டது. நான் அநுபவிக்க வேண்டியவைகளை எல்லாம் அநுபவித்தாய் விட்டது. சாத்தியமானால் மீண்டுமொரு முறை அவைகளையெல்லாம் அநுபவிக்க நான் ஆசையுடையவனாகவே இருக்கிறேன்; பரிபூரணமாய் அநுபவித்தாய் விட்டது. பெர்சிவார்டு 60 வயதை அடையும்போது, ஐயோ 16 வயதுடையவனாய் இருந்தேனில்லையே என அவர் சந்தோஷத்தோடு நினைப்பார் என்றே எண்ணுகிறேன்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் சூரியன் இரண்டடி ஏழங்குலம் சுருங்கி வருவதாக அவர் கூறுகிறார். அதன் பொருள் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. சூரியன் சதா சுருங்கிக்கொண்டு இருக்கிறதாக விஞ்ஞான சாஸ்திரிகள் கூறுகிறார்களாம். ரேடியம் என்னும் பொருள் சதா வெப்பத்தையும் ஒளியையும் அளித்துக்கொண்டிருப்பதாயும் அவ்வளவு வெப்பத்தையும் ஒளியையும் அது அளித்தாலும் அது கெட்டுப்போகாதென்றும் சில வருஷங்களுக்கு முன்னே கண்டு பிடிக்கப்பட்டது. அதுமுதல் சூரியன் குறுகுவதைப்பற்றிய அபிப்பிராயத்தை விஞ்ஞான சாஸ்திரிகள் மாற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

மற்றும் ஷேக்ஸ்பியர் கவியொன்றை பெர்சிவார்டு மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அதன் பொருள் பின் வருமாறு:—

> “நான் ஏற்கனவே கூறியுள்ளபடி நமது நடிகர்கள் எல்லாம் ஆவிகள்; அவைகள் எல்லாம் காற்றோடு காற்றாய்க் கலந்துவிட்டன.”

இந்த மனித ஆவியின் செயலுக்கு யாராவது எல்லை கற்பிக்க முடியுமா? மத்திய ஆபிரிக்கா பூராவையும் நாம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை; படமெடுக்கவும் இல்லை, அதற்கு முன்னாடியே விமானம் மூலம் வானமண்டலத்தைக் கடக்க சக்தி பெற்றுவிட்டோம். கடலின் அடியிலும் பிரயாணம் செய்யக் கற்றுக்கொண்டு விட்டோம். அடக்கமுடியாத மனித ஆவிக்கு எல்லையே கிடையாது. எனினும் மனிதன் ஒரு அற்பப்புழு என்றும் வாழ்நாள் மிகக் குறுகியது என்றும் அழியக்கூடியது என்றும் பெர்சிவார்டு கூறுகிறார்.

மனிதன் புழுவாயிருந்தாலும் சரி; ஆயுள் அற்பமானதாயிருந்தாலும் சரி. அவன் சாதித்த காரியங்கள் பெரியவை. அவைகளையே நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். அவனது பலவீனங்களை நாம் லக்ஷயம் செய்யவே வேண்டாம்.

மனிதன் இதுவரைச் சாதித்துள்ள காரியங்களைப் பாருங்கள்! ஒரு நக்ஷத்திரம் நிலைமாறுவதினால் அதன் பக்கத்தில் ஒரு உலகம் சதா சுற்றிக்கொண்டிருந்து அழிந்துவிட்டதென்றும் அந்த உலகம் முட்டுக்கட்டை போடுவதினாலேயே அந்த நக்ஷத்திரம் நிலை மாறுகிறதென்றும் ஒருவான சாஸ்திரி கண்டுபிடித்தானாம்; அது சரியென்று வேறொரு கணித சாஸ்திரி ருசுப்படுத்தினானாம். அந்த அழிந்துபோன உலகத்தின் அளவையும் கூட அவன் நிர்ணயம் செய்துவிடுகிறான். ஆனால் அதை எவரும் கண்ணால் கண்டதே இல்லை. அதே சமயத்தில் வேறொருவான சாஸ்திரி அதே மாதிரி ஆராய்ச்சி செய்து அதேமாதிரி முடிவுக்கு வருகிறார். இவ்வண்ணம் கண்ணால் காணாத ஒன்றைக் கண்டுபிடித்து ருசுப்படுத்தும் மனிதனின் சாமர்த்தியத்தைப் பாருங்கள். ஒரு அணுவான மனிதனின் சிந்தனை வெகு தூரத்திலுள்ள ஒரு நக்ஷத்திரத்தை அடக்கியாளுகிறதே!

மனிதனால் கண்டுபிடிக்க முடியாத இரண்டு பொருள்கள் இருப்பதாக அகஸ்டஸ்காம்தி என்ற தத்துவ ஞானி 1849—லோ 1850-லோ கூறினார். ஒன்று உயிரின் தோற்றம். மற்றொன்று நக்ஷத்திரங்கள் எந்தப்பொருளினால் ஆக்கப்பட்டது என்பது. ஆனால் இரண்டு ஜெர்மன் மாணவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது நக்ஷத்திரங்கள் எப்பொருளால் ஆக்கப்பட்டது என்பதை அகஸ்மாத்தாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை ஒரு பொழுதும் கண்டுபிடிக்க முடியாதென்று அகஸ்டஸ்காம்தி வெகுகாலத்துக்கு முன் கூறியிருந்தாலும் தற்செயலாய் இரண்டு மாணவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். எனவே மனித சக்திக்கு எல்லையுண்டா!

அடக்க முடியாத நமது ஆவிகளுக்கு பெர்சிவார்டு ஒரு எல்லை கற்பிக்கிறார். நாம் எப்படித் தோன்றினோம் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். வாலில்லாத் குரங்கிலிருந்து

நாம் தோன்றினோமாம். இரண்டோ மூன்றோ லக்ஷம் வருஷங்களுக்கு முன் அக்குரங்கு எவ்வாறு இருந்திருக்கும்? தன் குட்டியை அன்பாக வளர்த்துப் பராமரித்திராவிட்டால் நாம் தோன்றியிருப்போமா? ஹா! அன்பு எவ்வளவு முக்கியமானது பாருங்கள். அன்பு உள்ளத்தில் நம்பிக்கையை உண்டு பண்ணுகிறது. உலக வாழ்வுக்கு அந்த நம்பிக்கை ஒன்றே போதுமானது. அன்பும் நம்பிக்கையும் உள்ள இடத்து இருள் இருந்தாலென்ன? ஒளியிருந்தாலென்ன?

அழிவில்லாத நித்திய வாழ்வைப் பற்றி பெர்சிவார்டு கூறுகிறார். விருந்துச் சாப்பாடு எக்காலும் முட்டின்று நடைபெற்றுக் கொண்டு இருக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார் மரணமே யாவற்றிற்கும் முடிவு.

ஷேக்ஸ்பியர் கூறுவதைப்பாருங்கள்.

> பிறப்பை மக்கள் சகித்துக் கொண்டிருந்தது போலவே இறப்பையும் சகித்துக் கொண்டு தானிருக்க வேண்டும். ஏனெனில் பக்குவமடைவதே முக்கியம்.

ஆம்! பக்குவமடைவதே முக்கியம். ஹா! எவ்வளவு அழகான கருத்து! எவ்வளவு அழகான லக்ஷியம்! இந்த கருத்தைத்தான்—லக்ஷியத்தைத்தான் பெர்சிவார்டு அலக்ஷியம் செய்து விடுகிறார். ஆனால் இதையும்விட முக்கியமான ஒன்று இருக்கிறது. வாழ்க்கையின் முக்கிய லக்ஷியம் இன்பமல்ல; முக்கிய லக்ஷியம் வளர்ச்சியே. முன்னால் வாழ்ந்த பெரியார்களின் நிலையை அடைவதே—வளர்வதே வாழ்க்கையின் முக்கிய லக்ஷியம். உத்தமர்களில் நாமும் ஒருவர் என்ற நிலையை அடைவதே முக்கியம். சென்ற ஐயாயிர வருஷகால உணர்ச்சிகள்—இன்பங்கள் நமது வருங்கால உணர்ச்சிகளை—இன்பங்களை நினைப்பூட்டுகின்றன. இவ்வண்ணம் ஆனந்தம் வளர்ந்து கொண்டே போகிறது; இருள் மாய்ந்து கொண்டே போகிறது.

சாத்தியமானால் மனிதனின் பரிசுத்த ஆவியையும்—வரப்போகும் தெய்வீக மனிதனையும் பற்றிப்பேச எனக்கு இஷ்டந்தான். நீங்களே உங்களை கடவுளாக்குவது சாத்தியமாக இருக்கையில் கடவுள் எப்பேர்ப்பட்டவனாயிருந்தாலென்ன? அன்பு, ஞானம், தன்னடக்கம் முதலியவைகளை

யெல்லாம் நமது வாழ்க்கையிலேயே திருஷ்டாந்தப்படுத்திக் காட்ட முடியும்.

நீங்களே உங்களைக் கடவுளாக்கிக் கொள்வது சாத்தியமாக இருக்கையில் நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? பிறரை ஏன் குறைகூற வேண்டும்? உங்கள் சக்தியின் உச்ச எல்லையை அடைய நீங்கள் ஏன் முயலலாகாது? எனக்கு அதைச் செய்ய முடியவில்லை, இதைச் செய்ய முடியவில்லை என்பதின் பொருள் என்ன? உங்களுக்கு என்றேனும் சிரஞ்சீவியாக வாழ முடியாது.

இடத்துக்கும் காலத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் கூட அவர் உணரவில்லை. ஒரு நாள் இரவு முழுதும் கடவுள் போல உங்களுக்கு வாழ முடியும். உயரிய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் ஒன்றுபடுத்தி காதல் இன்பத்தைப் பூரணமாக அநுபவித்துப்பாருங்கள். அது அன்று எல்லையற்றதாயிருக்கிறதா இல்லையா என்பதைப் பாருங்கள்.

காலமே நமது பூர்வ சொத்து. ஹா! அது எவ்வளவு விரிவானது! எல்லையற்றது!

என கதே கூறியிருக்கிறார். உங்களால் சாத்தியமான வரை உயர்வான வாழ்க்கை நடத்த நீங்கள் ஒரு நாளாவது முயன்றிருக்கிறீர்களா? விரூபமான உங்கள் சிக்காகோ நகரத்தைப்பார்க்கும்போது நீங்கள் ஒரு நாளாவது உத்தம வாழ்வு வாழமுயலவில்லையென்றே நினைக்கிறேன். ஒரு நாளாவது உத்தம வாழ்வு வாழ நீங்கள் முயன்றிருந்தால் சிக்காகோ காட்சியை சகித்துக் கொண்டு இருந்திருக்க மாட்டீர்கள், எனினும் சிக்காகோவில் ஓரே ஒரு அழகான மாளிகை இருக்கிறது. அதுதான் லூயிஸ் சல்லிவின் மாளிகை.

நேற்று மத்தியானம் நான் வெகு நேரம் அதைப்பார்த்துக்கொண்டு நின்றேன். வேறு எவரும் அதைப் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. பெர்சி வார்டு போன்றார்க்கு அந்த மாளிகையின் மகிமை விளங்காது. அதைப் பார்த்துக் கொண்டு நிற்பது அவர்களுக்குக் கஷ்டமாகத்தான் தோன்றும்

மீண்டும் இன்றும் அந்த மாளிகையை நான் பார்த்துக் கொண்டு நின்றேன். லூயிஸ் சல்லியின் ஒரு மகான் தான். அவருக்கு அழிவே இல்லை. அவரைப்பற்றி நீங்கள் எல்லாம் பெருமைப்படவேண்டியதுதான்.

மரணம் வாழ்க்கையின் முடிவாயிருப்பதினால் வாழ்க்கைக்கு லக்ஷயமே இல்லையாம்; இன்பம் அழியக்கூடியது ஆகையினால் இன்பமும் இல்லையாம். இம்மாதிரி அற்பத்தனமான வாதத்துக்கு பதிலளிக்கவே தேவையில்லை.

ஜீவிதப்போராட்டமே வாழ்க்கையின் தத்துவமாயிருப்பதினால் வாழ்வில் நன்மையில்லையென்றும் பெர்சி வார்டு கூறுகிறார். ஆனால் ஜீவிதப் போராட்டத்தின் மூலமே முன்னேற்றம் உண்டாகிறது. அதை அவர் கூறுகிறாரில்லை. வளர்ச்சியே—முன்னேற்றமே ஜீவிதப் போராட்டத்தின் லக்ஷயம். வாலில்லாக் குரங்கு இந்தக் கொடிய ஜீவிதப் போராட்டத்தின் மூலமே மனிதனாகப் பரிணமித்தது. இந்தப்போராட்டத்தினாலேயே எல்லாதேசத்தாரும் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். நாகரிகம் என்பதுதான் என்ன? மிருகப்பிராயமாயிருக்கும் மனிதனை உத்தமனாக்குவதே நாகரிகம்! வாலில்லாக் குரங்கை மனிதனாக்கவே நாம் முயன்று கொண்டிருக்கிறோம்.

மரணம் வெறுக்கத்தக்கது என பெர்சி வார்டு கூறுகிறார். ஆனால் ஸ்வின் போர்ன் என்ற புலவர் கூறுவதைப் பாருங்கள்.

> எந்த உயிரும் எந்நாளும் வாழ முடியாது; இறந்தவன் ஒரு நாளும் பிழைக்கவுமாட்டான். நீரோட்டமில்லாத நதியும்கூட கடைசியில் கடலைத்தான் அடைகிறது, எனவே கடைசியில் எல்லா உயிர்களுக்கும் ஓய்வு கிடைப்பதற்காக நாம் கடவுளை வாழ்த்த வேண்டியதுதான்.

மரணம் ஆனந்த மயமானதென்று வால்ட் விட்மான் என்ற புலவரும் பாடியிருக்கிறார்.

ஜீவிதப் போராட்டமே வாழ்க்கையின் தத்துவம். கீழ்த்தரப் பிராணிகளுக்கு அது பரம சங்கடமாகத்தான் இருக்கும். எனினும் அது மேலானதே. ஏனெனில் அதன்

முடிவு முன்னேற்றம். பெர்சி வார்டின் இரண்டாவது வாதத்துக்கு இதுவே நானளிக்கக் கூடிய பதில்.

மூன்றாவது பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வு துன்பமயமாயிருப்பதாய் பெர்சி வார்டு குறை கூறுகிறார். "அப்படியானால் அந்த வாழ்க்கையை ஒழித்து விடும், 50 வருஷ துன்ப வாழ்க்கையை ஒருவருக்கும் தாங்கிக் கொண்டு இருக்க முடியாது" என்றுதான் நான் அவருக்கு விடையளிப்பேன்.

எனது வேடிக்கையான ஒரு அநுபவத்தை உங்களுக்குக் கூறுகிறேன். உங்களுக்கும் அதுவே அநுபவமாகவுமிருக்கலாம். எனது இறந்த காலத்தைப்பற்றி சிந்திக்கும் போது நான் அநுபவித்த இன்பங்களே எனது ஞாபகத்துக்கு வருகின்றன. துன்பம் எதுவும் என் ஞாபகத்துக்கு வரவில்லை. நான் முதன் முதல் ஒரு பெண்ணுக்கு அளித்த முத்தமே என் ஞாபகத்துக்கு சதா வந்து கொண்டிருக்கிறது. அந்த முத்தமே சங்கிலித்தொடர்போல் அடிக்கடி என் ஞாபகத்துக்கு வருகிறது. எத்தனையோ இரவுகளில் அதை எண்ணி நான் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். அப்பால் என் நண்பர்கள் காட்டிய அன்பு என் ஞாபகத்துக்கு வருகின்றன. உலகம் முழுதும் அன்பு மயமாக—காதல் மயமாகவே எனக்குத் தோன்றுகிறது. ஜீவிதப்போராட்டத்திலே நான் அதிர்ஷ்டசாலிதான். நீங்களும் அதிர்ஷ்டசாலிகளே. இல்லையானால் நீங்கள் இன்று பிரசன்னமாகியிருக்க மாட்டீர்கள்.

(இதற்கு பெர்சி வார்டு அளித்த பதில் அடுத்த மாதம் வெளிவரும்)

ஆங்கிலேயப்பெண்கள் தங்கள் நாகரீக நடை உடை பாவனைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளுவதால் வருடா வருடம் 20 கோடி பவுன் வீணாகிறதாம்.

புழுக்களுக்கு காதுகளில்லை. அவைகளின் உடலிலுள்ள நரம்புகள் சப்தங்களை கிரகிக்கும் தன்மையனவாம்.

மதங்களும், அவைகளின் பலன்களும்.

(மாஜி சே. நரசிம்மன் எம். ஏ.)

மதம் என்றால் என்ன? எங்கு கண்டாலும் மதம் என்பது பொது ஜனங்களை மயக்கும் ஓர் அபினி போன்றது என்று தொழில் கட்சிகள் சொல்லுவதற்கு தாத்பரியம் என்ன? கேவலம் மரத்தையும், கல்லையும் விழுந்து கும்பிட்டு ஆடு, மாடு, கோழிகளைப்பலி கொடுப்பது மதமா? அல்லது ஒன்றும் தெரியாத ஜனங்கள் நம்பும் ஓர் மூடநம்பிக்கையே மதமா? காந்தியாரைப் போல் ஒரு பெரியார் என் மனச்சாட்சியே எனக்குக் கடவுள் என்றால் அதுவும் ஓர் மதந்தானா?

இந்த வியாசத்தில் மேல்சொன்ன கேள்விகளுக்கு ஓர் பதில் அளிக்கப்படும். முதலில் மதம் என்னும் பதத்திற்கு ஓர் நிச்சயமான பொருள் நிர்ணயித்துக் கொள்ளப்படவேண்டும். ஒரு புறம் காட்டுமிராண்டிகள் மின்னலையும், இடியையும், நெருப்பையும், கடவுள் என்று நம்பி பயந்து கைகூப்புகிறார்கள். மற்றொருபுறம் சிலர் உலக நன்மையை அடைவதே, கடவுளை பூசிப்பது என்று நம்புகின்றனர். ஆகையால் மதம் என்னும் பதத்திற்கு ஒரு நிச்சயமான பொருளைக்கொண்டே நாம் மதத்தின் நன்மை தீமைகளை விசாரிக்க முடியல வேண்டும்.

உலகில் அனேக மதங்கள் இருக்கின்றன. கிறிஸ்து மதத்தை ஐரோப்பிய ஜனங்களில் பெரும்பாலோர் தழுவுகின்றனர். இஸ்லாம் என்னும் ஏகமதிய மதம் ஆசியா கண்டத்தில் மேற்கு பாகத்திலும், ஆப்பிரிக்காவில் வடபாகத்திலும், சீனாவிலும், இந்தியாவிலும் பரவி இருக்கிறது. பௌத்த மதத்தை சீனாவில் பெரும்பாலோர் அனுஷ்டிக்கின்றனர். இந்தியாவில் சுமார் இருபத்துநான்கு கோடி ஜனங்கள் ஹிந்துக்கள். உலகில் பெரும்பான்மையோர் கிறிஸ்துவ மதத்தையாவது, பௌத்த மதத்தையாவது, ஏகமதிய மதத்தையாவது, ஹிந்து மதத்தையாவது தழுவுகின்றனர்.

ஹிந்து மதத்தைத் தவிர மற்ற எல்லா மதங்களும், தங்கள் மதத்தை பரவச்செய்ய முயன்று கொண்டும் வருகின்றன. சென்ற ஒரு நூற்றாண்டாகத்தான் பலாத்காரமாக மதத்தை பரவச் செய்வதை சில மதஸ்தர்கள் நியாயமல்லவென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஒரு நூற்றாண்டுக்குள் தான் வேறு மதஸ்தர்களுக்கு மேல் நாடுகளில் ராஜீய சுதந்தரங்கள் அளிக்கப்பட்டன. இங்கிலாந்தில் கத்தோலிக்கர்களுக்கும், யூதர்களுக்கும், பலகாலம் வரையில் ஓட்டுரிமையாவது கவர்ன்மெண்ட் உத்தியோகமாவது கிடையாது.

எல்லா மதங்களும் முக்கியமான சில நம்பிக்கைகளைக் கையாளுகின்றன. முதலாவது ஓர் கடவுள் (A Personal God) இந்தக் கடவுள் கிரீக் தேசத்து சாஸ்திரி பிளேடோ (Plato) நினைத்த மாதிரி கடவுளல்ல. பிளேடோவின் கடவுள் உலகில் இருக்கும் அநித்தியத்திற்கெல்லாம் பின்னால் நிற்கும் ஓர் நித்தியமான எண்ணம் [Idea of Ideas] அவருக்குப் பின் பிறந்த அரிஸ்டாடில் என்னும் சாஸ்திரிக்கு கடவுள் எல்லா எண்ணங்களுக்கும், புனிதமான எண்ணம் [A thought of thoughts] இவர்களுடைய கடவுள் கேவலம் புத்தி பிரயோகத்தால் அடையப் பட்ட கடவுளேயன்றி பக்திபரவசத்தால் அடையப்பட்ட கடவுளல்ல. மேற் சொன்ன மதங்களெல்லாம் பக்தி பரவசத்தால் அடையப்பட்ட கடவுளை தியானிக்கும் மதங்கள் ஆகையால் கேவலம் புத்தியை உபயோகப்படுத்தி நுண்ணறிவால் மனிதன் இவ்வுலக சிருஷ்டியை ஆராய்வது மதமல்ல. அது சாஸ்திரம். (Philosophy)

மதங்கள் பக்தியினால் கடவுளைத் தியானிக்கின்றன. உலக சிருஷ்டியை எல்லாம் வல்ல இறைவனின் லீலா விபூதி என்று யோசிக்குங்கால் சாதாரண மனிதனுக்கு ஏற்படும் மயிர்க் கூச்சல் அந்த பக்தி பரவசத்தினாலேதானாகும். அக்கடவுளைத் தியானிக்கும்பொழுது சற்றும் புத்திக்கு வேலையில்லை.

இரண்டாவதாக எல்லா மதங்களும் சில கோட்பாடுகளை நியமித்துக்கொண்டு அக்கோட்பாடுகளை கடைப்பிடித்து ஒழுகினால் தான் இறந்த பின் கடவுளை அடையலாம் என்று வற்புறுத்துகின்றன. காலத்திற்கு தகுந்தவாறு ஏதோ சில விஷயங்களில் சில மதங்கள் விட்டுக்கொடுத்தபோதிலும் முக்கியமான விஷயங்களில் மாறுதல்களை ஒப்புக்கொள்வதில்லை. அமெரிக்காவில் டென்னிசே (Tennesse) என்னும் மாகாணத்தில் ஒரு உபாத்தியாயராவது மனிதன் என்பவன் கீழான பிராணிகளிலிருந்து ஆயிராயிர வருஷங்களாக மேம்பாட்டை அடைந்த ஓர் ஜந்து என்பதை

(Darwin's Theory of Evolution) பள்ளிக்கூடங்களில் சொல்லித்தரக்கூடாதென்றும் ஏனெனில் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்பு எழுதிய பைபிளில் மனிதனும், உலகமும் ஆறுநாட்களில் சிருஷ்டிக்கப்பட்டதென்றும் குதிரை நாய் இன்னும் மற்ற எல்லா ஜீவராசிகளில் ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாய் கடவுள் படைத்தாரென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் இப்பொழுதுங்கூட பிள்ளைப்பிறப்பை கருவிகள் கொண்டு தடுப்பது (Birth Control) பாவம் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. கத்தோலிக் கிறிஸ்துவர்கள் ஹிந்துக்களைப்போல் மணவினையை உயிரிருக்கும் வரையில் பிரிக்க முடியாத கட்டுப்பட்ட மணவினை என்று இப்பொழுதும் கருதி வருகிறார்கள். ஆகையால் எல்லா மதங்களும் சில கோட்பாடுகளை எக்காலத்திலும் எவ்வளவு சங்கடங்களிருந்தபோதிலும், பொது நன்மைக்கு எவ்வளவு மாறாக இருந்தபோதிலும் [இந்தியாவில் சிறு குழந்தைகளுக்குக் கலியாணம் செய்வதுபோல] இம்மிகூடப் பிசகாமல் அனுசரிக்க வேண்டுமென்று நம்புகின்றன. இக்காரணத்தினால் தான் இங்கிலாந்தில் மிகவும் கியாதிபெற்ற சாஸ்திரி பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் சொல்லுவதாவது:—

"மதம் என்பது சில கோட்பாடுகள் அடங்கிய ஓர் கட்டு. இந்த கோட்பாடுகள் மனிதனை அவன் ஆயுர்நாள் முழுவதும் அடக்கி ஆண்டு வருவனவாகும். இக்கோட்பாடுகளுக்குக் காரணம் வேண்டியதில்லை. இவை நியாயத்துக்கும், அனுபவத்திற்கும் நல்ல பலனுக்கும் விரோதமாகவுமிருக்கலாம். இப்படிப்பட்ட இக்கோட்பாடுகளை ஜனங்களுக்கு ஊட்டும் விதம் பகுத்தறிவை உபயோகப்படுத்தக் கூட அல்ல. மிரட்டலாலும், பக்தி பரவசத்தாலும் தான் இக்கோட்பாடுகளை ஜனங்கள் அனுசரித்து வருகிறார்கள்"

ஆகையால் மதங்கள் இவ்வாறாயின் நாம் மதங்கள் சென்ற இருபது நூற்றாண்டுகளாக மனிதனுக்கு அளித்த நன்மை தீமையைச் சற்று ஆராய்வோம். கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தவர் இயேசுகிறிஸ்து என்ற ஓர் புனித புருஷர். அவர் தன்னைச் சுற்றி இருந்த ஜனங்கள் சாத்திரக்காரர்களுடைய அழும்பால் கஷ்டப்படுவதைப் பார்த்து மனம் தாங்காது, அவர்களை விடுவிக்கத் தோன்றினவர். அவர் உபதேசித்தது "உன்னை ஒருவன் வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் இடது கன்னத்தை (உன்னை அடித்தவனுக்கு) காண்பித்து அறையச்செய்." "உன் சட்டையை ஒருவன் பிடுங்கிக்கொண்டால் அவனுக்கு உன் மேலுள்ள வேஷ்டியையும் கொடு" என்பதான சாத்விக தர்ம

மாகும். எளிமை, சாத்வீகம், தர்மம், நிஜத்தையே கடைபிடித்து ஒழுகுவது முதலாகிய இன்னும் பல தர்மங்களை வெகு தெளிவாகவும் மனதில் பதியும்படியாகவும் அவர் ஜனங்களுக்கு எடுத்துரைத்தார். அக்காலத்து மடாதிபதிகளுக்கு இது சற்றும் பிடிக்கவில்லை. மேலும் கிறிஸ்துவைச்சுற்றி கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. அவர் மேல் ஓர் ராஜீய குற்றத்தைச்சாட்டி அவரை சிலுவையிலறைந்தனர்.

அவ்வளவு சாந்தகுணம் வாய்ந்த பரம புருஷனைக் கொன்றது பழைய மதத்துக்கே ஓர் பெரிய அபக்கியாதியாயிற்று. மேலும் கிறிஸ்துவைச் சுற்றியிருந்து அவர் இனிய மொழிகளையும் தத்துவங்களையும் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அவர் மதத்தைப் பரவச் செய்ய உயிரையும் துறக்கத் தயாராயினர். அவர் மதம் மேலும் மேலும் விருத்தியடைந்தது. அநேகர் அவர் மதத்தைத் தழுவலாயினர். கடைசியில் ரோம ஏகாதிபத்தியத்திற்கே தலைவரான கான்ஸ்டென்டைன் (Constantine) கிறிஸ்துமதத்தை ரோம ஏகாதிபத்ய மதமாகச்செய்தனர். ஆனால் மதம் க்ஷீணிக்க ஆரம்பமாயிற்று. கிறிஸ்துவைச்சுற்றி இருந்தவரில் ஒருவராவது அவர் சிஷ்யர்களில் மதத்தை அறிந்தவரில்லை. அவர் சிஷ்யர்களில் முக்கியமானவர் இஸ்ரேல் தேசத்து சிற்றரசர்களாக அவருடைய பன்னிரண்டு சிஷ்யர்களையும் செய்ய கிறிஸ்துவை வேண்டினர். இப்படி பரலோக ஞானியை வேண்டின சிஷ்யன் அவருடைய தத்துவங்களை அறிந்திருக்கக் கூடுமா? அவருகிலிருந்து அவர் தினசரி நடத்தையையும், அவர் பேச்சையும் கேட்டு ஒருவன் இவ்வளவு அசட்டுத்தனமான விண்ணப்பம் செய்தால், இருபது நூற்றாண்டுகளுக்குப் பின் பிறந்த நாம் எவ்வாறு கிறிஸ்துவை அறிவது?

இது நிற்க, நாம் கிறிஸ்து மதத்தின் சரித்திரத்தை ஆராய்வோம். கான்ஸ்டென்டைன் கிறிஸ்து மதத்துக்கு ஆதரவு கொடுத்த பின்பு அம்மதம் மிக வேகமாகப்பரவியது. ஆனால் அது பரவப்பரவ அநேகருக்குப் பிழைப்புக் கொடுத்ததேயன்றி மதம் வேரூன்றவில்லை. மதாச்சாரியார்கள் கூட நுழையத் தலைப்பட்டனர். ரோமாபுரி போப்புக்கு முன் அரசர்கள் கூட தலைகுனிந்து மரியாதையுடன் நடந்துகொண்டனர். ஆனால் பொய்யும், புரட்டும், அநியாயமுமே மதத்தில் குடிகொண்டன. சூரிய வெளிச்சம்போல் பிரகாசமான கிறிஸ்து மதத்தை இருண்ட மேகங்கள் மறைத்தன. பாபம் செய்தவன் பணத்தைக்கொடுத்து மன்னிப்பைப் பெறலாம். ஜனங்களெல்லோரும் ரோமில் கட்ட வேண்டிய சர்ச்சுக்கு பணம் கொடுத்தால் தான் ஸ்வர்க்கத்துப் போக முடி

யும் என்று போப்புரைத்தார். ஜனங்களை பலவிடங்களிலும் கஷ்டப்படுத்தி பணம் வசூலிக்கப்பட்டது.

இந்த அநியாயத்தைப் பொறுக்காது லூதர் (Luther) என்னும் சாமியார், கிறிஸ்து எப்படி பழைய மடாதிபதிகளை உயிரையும் திரணமாக எண்ணி எதிர்த்தனரோ, அவ்வாறே எதிர்த்தனர். பழைய மாதிரி லூதரைப் பின் பற்றினவர்களை கத்தோலிக் சாமியார்கள் துன்புறுத்தினர்- அனேகர் கொல்லப்பட்டனர். ஆனால் பிராடஸ்டென்டு கிறிஸ்து மதம் இறந்தவர்களை ஆஸ்திவாரமாகக் கொண்டு ஊர்ஜிதமாக கட்டப்பட்டது. பிராடஸ்டென்டு மதமும் பரவியது. இதுவும் பழைய கத்தோலிக் மதத்தைப்போல் கடைசியில் க்ஷீணித்தது. இம் மதத்திலும் பிளவுகள் ஏற்பட்டன. பிராடஸ்டென்டு மதஸ்தரும் இயற்கை சாஸ்திரத்தை வற்புறுத்தியதற்காக தாமஸ் பெயின், (Thomas Paine) சார்லஸ் பிராட்லா (Charles Bradlaugh) இனனும் மற்றவர்களைத் துன்புறுத்தினர்.

கிறிஸ்து மதம் மட்டும் இந்தச் சரித்திரத்திற்கு உதாரணமல்ல. மகம்மதிய மதம் அதே சரித்திரத்தைத்தான் விளக்குகிறது. மகமதியர்கள் இந்தியாவை ஆண்ட காலம் முழுவதும் மற்ற மதஸ்தர்களுக்குக் கஷ்டம்தான். ஆனால் அக்பர், ஜிஹாங்கீர் நாள்களில் கஷ்டமிருந்ததாக தெரியவில்லை. அவுரங்கசீப் காலத்தில் ஹிந்துக்கள் மட்டுமல்லாது ஷியா மகமதியர்களும் கஷ்டப்பட்டனர். இந்து மதமும் மேற்கண்ட மதங்களுக்குப் பின்னடைந்ததல்ல, தென்னிந்தியாவிலோ சமணர்கள் மிக துன்பப்படுத்தப்பட்டார்கள். மதுரையில் 8000 சமணர்கள் ஒரே நாளில் தூக்கிலிடப்பட்ட வைபவத்தைக் குறித்து வருடா வருடம் ஓர் கொண்டாட்ட முண்டு.

எந்த மதத்தை ஸ்தாபித்த பெரியாரும் மற்ற மதஸ்தர்களை துன்புறுத்த ஆக்ஞை செய்ததாகத் தெரியவில்லை. சிலர் இயேசு கிறிஸ்துவைப்போல் தன்னைப் பின் பற்றினவர்களுக்கு பணத்தைக் கொண்டு மதங்களை ஸ்தாபனம் செய்யக்கூடாதென்று, புத்தி புகட்டிச் சென்றனர். ஆனால் எந்த மதமும் மதத்தை ஸ்தாபித்தவர் உயிர்துறந்தவுடன் க்ஷீணிக்க ஆரம்பித்துக் கடைசியில் ஏழை மக்களைக் கஷ்டப்படுத்தியும், ஏமாற்றியும் பணத்தைப் பிடுங்கத் தொடங்கியிருக்கின்றது. இதைக் காரணமாகக்கொண்டுதான் ஓர் பிரபல தொழில்கட்சிக்காரர் "மதங்களை ஸ்தாபனம் செய்யும் வரையில் அந்த மதத்தைச் சார்ந்த சிலர் சர்வத்தையும் தியாகம் செய்து கடவுள் பைத்தியம் பிடித்த ஞானியாய் அலைகின்றனர்.

ஸ்தாபனம் ஆனதும், ஜனங்களைக் கொள்ளையிடும் வேலை ஆரம்பமாகிறது. ஆனால் அது பணத்தைக் கொள்ளைகொள்வதோடு மட்டும் நிற்காமல் மனிதன் புத்தியையும் மயக்க அவனுக்கு உண்மையே தெரியாத விதம் மறைத்து அவன் வாழ் நாள் முழுவதும் முதலாளிகளின் அதர்மத்தைத் தர்மமென்று ஒப்புக்கொள்ளும்படி போதிக்கின்றது'' என்று கூறினர்.

தொழில் கக்ஷிக்காரர் ''மதம் என்பது ஓர் அபினி'' என்று சொல்லுவதின் பொருள் இப்பொழுது வாசகர்களுக்கு விளங்கியிருக்கும். பூமியில் அனுபவிக்கும் ஒவ்வொரு துயரத்தையும் ஸ்வர்க்கத்தில் ஏதோ வேர் கணக்குப்பிள்ளை எழுதி வைப்பதாகவும், இம்லோகத் துயரங்களுக்கு பரலோகத்தில் ஆனந்தமும், சந்தோஷமும் உண்டென்றும் எல்லா மதங்களும் போதிக்கின்றன. ஆகையால் பூமியில் பணக்காரர்களும், முதலாளிகளும் இழைக்கும் தீங்குகளுக்கெல்லாம் கடவுள் சரியான வெகுமதி கொடுப்பாரென்று கருதிக் கொண்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் தொழிலாளிகள் நிம்மதியாக ஆனந்தபரவசமாக இருக்கவேண்டுமாம்!

மதமே அவசியமில்லையென்றால் சிலர் உலகில் பொய், திருட்டு, பலாத்காரம், விபசாரம் இன்னும் மற்ற அநியாயங்கள் பரவுமென்று நம்புகின்றனர். ஓர் நிபுணர் மனிதன் இவ்வுலகில் யோக்கியனாக நடப்பதும், நடப்பதற்கு முயலுவதும் மேலுலகில் கடவுளிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற பயத்தால்தானென்று நிச்சயமாகக் கருதுகிறார். எல்லாம் வல்ல இறைவனொருவன் எங்கும் வியாபித்து, மனிதன் நினைக்கும் எண்ணங்களையும், அவன் செய்யும் காரியங்களையும் ஒரு டைரியில் (Diary) எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார் என்ற பயத்தால்தான் மனிதன் யோக்கியனாக நடந்துகொள்கின்றானென்றால் மனிதன் அயோக்கியனென்றும், ஏதோவொரு பயத்தால்தான் யோக்கியனாய் இருக்கக்கூடும் என்றும் சொல்லுவது போலாகும். அன்றியும் கடவுளை வெறும் துப்பறியும் உத்தியோகஸ்தனாக ஆக்கியது போலவுமாகும். இது செய்வது ஒரு பெரிய அசட்டுத்தனம். இவையெல்லாம் இருந்தும் மக்கள் நடத்தை சன்மார்க்கமென்று சொல்ல முடியுமா? மேலும் சன்மார்க்கத்தை கேவலம் ஓர் பயத்தின் மேல் ஸ்தாபித்தால் மனிதன் வருங்காலங்களில் இந்த பயம் நீங்கிவிட்டால் சன்மார்க்கத்திற்கு அஸ்திவாரமில்லாமல் துன்மார்க்கம் மேலிட்டு மனிதனையே கெடுப்பித்து விடலாமல்லவா?

கற்புக்குக்காரணம் கடவுளிடத்தில் பயத்தினாலா? வைத்திய சாஸ்திரங்கள் குஷ்டம், கண்குருடு, பைத்தியம் (Softening of the brain) இன்னும் மற்ற வியாதிகள் விப சாரித்தனத்தால் ஏற்படுகின்றன என்று நிச்சயமாய்ச் சொல்லுகின்றனர். இவை நான்கு அல்லது ஐந்து தலைமுறைகளுக்குக் கூட வியாபிக்கின்றன என்று நம்பப்படுகிறது. ஆகையால் இதை அறிவித்து விட்டால் மனிதன் சன்மார்க்கமாக நடந்து கொள்ள கடவுள் என்னும் சாட்டை வேண்டுவதில்லை. அவன் புத்தியே அவனுக்குச் சரியான வழியைக்காட்டும்.

சாஸ்திரி லாஸ்கி (Prof. Laski) என்பவர் எழுதியிருக்கும் நூல்களில், ஒவ்வொரு மனிதனும் அரசாங்கத்தார் ஏற்படுத்தும் சட்டங்களை நுண்ணறிவுடன் கவனித்துப்பார்த்து அவை பொது ஜனங்களின் நன்மைக்கும், தன்னுடைய வளர்ச்சிக்கும் தடையில்லாமலிருக்கின்றனவா என்று அறிந்து, அவை தன் வளர்ச்சிக்குத் தடையாகவிருந்தால் அம்மனிதன் அதை எதிர்த்துப்போராட வேண்டுமென்று வற்புறுத்துகிறார். மனித சுதந்திரம் இப்படி நுண்ணறிவுடன் பாது காக்கப்படவேண்டும். ஆனால் மதங்களோ புத்தியைப் பிர யோகித்தவுடன் கீழே வீழ்கின்றன. முரட்டு மதப்பற்றுள்ள மனிதன் சுதந்திரத்திற்கே உலக சரித்திர முழுவதும் எதிரிடையாக விருந்திருக்கிறது. ஆகையால்தான் பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் என்பவர் "உலகச் சரித்திர முழுவதும் விஞ்ஞான சயன்ஸ் சாஸ்திரமும் (Science) சாஸ்திர புத்தியும் உலக நன்மையை அதிகரித்திருக்கிறது. ஆனால் உலகத்திற்கு ஏற்பட்ட பெரும் கேடுகளெல்லாம் கேவலம் மதங்களால் தான்" என்று சொல்லியிருக்கிறார்.

மனிதன் இவ்வுலகில் படும் துயரத்துக்கெல்லாம் அவன் செய்த பாவங்களே காரணமென்று மதங்கள் சொல்லுகின்றன. இரண்டு மூன்று வயது குழந்தைகள் குழந்தை ஆஸ்பத்திரிகளில் படும் கஷ்டங்களை ஜன்மத்துப் பாபபலன், அதுதான் கடவுளின் ஆக்ஞையென்றால், புத்தியுள்ள ஒருவன் கடவுளை ஒரு பெரிய பைத்தியக்காரன் என்று நினைப்பானே யன்றி புத்தியுள்ளவன் என்று கருதமாட்டான்.

ஆகையால் மதங்கள் பொது ஜனங்களுக்கு மிக நன்மை செய்ததாகத் தெரியவில்லை, அபினி சாப்பிட்டவன் மயங்கி ஒரு மூலையில் கிடப்பதுபோல், தொழிலாளிகள்

இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான அதிசயங்கள்.

பேர்.		வஸ்துக்களின் பெயர்.	வருஷம்.
கோல்ட் (அமெரிக்கா)		ரிவால்வர்	1835
மோர்ஸ்	,,	மின்சார சக்தி	1835
பெல்	,,	டெலிபோன்	1836
எடிசன்	,,	கிராமபோன்	1877
எடிசன்	,,	வெளிச்சமாக எரியும் விளக்கு	1878
எடிசன்	,,	சினிமாப்படம் காட்டும் மிஷின்	1893
ரைட் பிரதர்ஸ் (அமெரிக்கா)		ஏரோபிளேன்	1903

தாங்கள் படும் கஷ்டங்களுக்கெல்லாம் பரவுலகில் நன்மையுண்டு என்ற மூடநம்பிக்கையால் மயங்கி, தங்களுடைய நன்மையை ஒன்று சேர்ந்து இவ்வுலகிலேயே நன்மை தேடவொட்டாமலிருப்பதற்காக ஏற்படுத்தப் பட்டவைகள் மதங்களென்று தோன்றுகின்றது.

சன்மார்க்கமென்றால் என்ன? உலக வாழ்க்கையே ஓர் பெரும் கூட்டுறவு. அதாவது எப்படி ஒரு முனிசிபாலிட்டியின் எல்லையில் வசிக்கும் ஜனங்கள் வியாதிகள் பரவாமலிருப்பதற்காகவும், ஜனநெருக்கத்தினால் துர்நாற்றமேற்படாமலிருப்பதற்காகவும், சுகாதாரச் சட்டங்களை அனுசரிக்கின்றார்களோ அதேமாதிரி இந்தப் பெரும் உலகம் ஒரு முனிசிபாலிட்டி போலாகி அம்முனிசிபாலிட்டியிலிருக்கும் மானிடர் யாவரும் தாங்களும் தங்கள் குழந்தைகள் யாவரும் ஒன்று போல் உயிருடன் ஜீவித்திருப்பதற்கான நல்ல வழிகளெனப்படும். அவ்வழிகளை யாவரும் கையாண்டு வரவேண்டும் என்பதாகும். தற்காலத்தில் போக்கு வரவு சாதனங்கள் அதிகரிக்க அதிகரிக்க, சன்மார்க்கம் மேலிட்டாலன்றி இனி உலக வாழ்க்கை சீர்கெட்டுப் போகும். 1914ம் வருஷத்தில் ஐரோப்பாவில் ஒவ்வொரு வல்லரசும் தங்கள் தேசம் ஆதிக்கம் அதிகப்படுவதற்காக பொய், களவு, பலாத்காரம் செய்ததால் தான், நான்கு வருஷங்கள் ஒருவரை யொருவர் கொன்று கொண்டிருந்தனர்.

வாட் (இங்கிலாந்து) ஸ்டீம் இன்ஜின் 1565
திமானியர் (பிரான்ஸ்) தையல் மிஷின் 1830
டக்குரி அண்டு நீப்சி (பிரான்ஸ்) போட்டோ கிராப் 1839
நோபெல் (ஸ்வீடன்) டைனமைட் 1867
மார்கோணி (இட்டாலி) வயர்லெஸ் 1896
ஈஸ்ட்மான் (அமெரிக்கா) போட்டோ பிலிம் 1883
குடென்பர்க் (ஜெர்மனி) அச்சு எழுத்து 1450
சீனர்கள் பிரிண்டிங் 593
மாடம் கர்ரீ (பிரான்ஸ்) ரேடியம் 1903
I. L. பேர்பாட் (இங்கிலாந்து) டெலிவிஷன் 1926
டாரி செல்லி (இட்டாலி) பாரோமீடர் 1643
ரோஎண்ட்ஜென் (ஜெர்மனி) எக்ஸ்ரே மிஷின் 1895
மெர்கென் தாலர் (அமெரிக்கா) லினோ டைப் 1885
லார்ட் லிஸ்டர் (இங்கிலாந்து) ஆபரேஷன் ஆயுதங்கள் 1867
கோச் (ஜெர்மனி) காலரா மருந்து 1884
லவெரானி (ஜெர்மனி) மலேரியா மருந்து 1880
எபெர்த் ,, டைபாயிட் மருந்து 1880
டாக்டர் ஜென்னர் (ஜெர்மனி) அம்மைகுத்தும் இனாகு
லேஷன் 1795
டேவி (இங்கிலாந்து) மைனர்ஸ் சேப்டிலாம்ப் பாரென்
ஹெய்ட் (பிரான்ஸ்) தர்மா மீட்டர் 1721
கலிலியோ டெலஸ்கோப்
பெஸ்ஸமர் (இங்கிலாந்து) ஸ்டீல் 1858
சாவ்ரியா (பிரான்ஸ்) கெந்தக நெருப்புக் குச்சி 1831
வாட்டர்மன் (அமெரிக்கா) பவுண்டன் பேனா 1864
அமெரிக்கா ரேடியோ கார்ப்பரேஷன் வயர்லெஸ்
போட்டோ 1924
ஷோலஸ் டைப்ரைட்டர் 1873
தாமஸன் வெல்டிங் எலெக்டிரிக் 1869
கவுண்ட் ஜெப்பலின் ஜெப்பலியன் கப்பல் 1908
கர்டிஸ் ஹைடிரோபிளேன் 1911
பாராடே (இங்கிலாந்து) டைனமோ 1831
டைம்லர்-பென்ஸ் ஆடோமோபைல் காஸோலைன் 1884
பிரஸ் ஆர்க்லைட் 1879
கில்லெட் (அமெரிக்கா) சேப்டிரேசர் 1904
ஸ்விண்டன் டாங்கி (மிலிட்டெரி) 1914
காட்லிங் } 1861
விக்லேஸ் } மிஷின் பீரங்கி 1912

(ந-ணி)

சம்பாஷணை.

(நாரதர் எழுதுவது)

ஓர் பார்ப்பனருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் ரெயிலில் பேசும் போது நடந்த சம்பாஷணை.

(பார்ப்பனர் சாஸ்திரியார், பார்ப்பனரல்லாதார் கந்தையா)

சாஸ்திரியார்:— கந்தையா எங்கு போகிறீர்.

கந்தையா:— அது யார் சாஸ்திரியா?

சாஸ்திரி:- ஆம், ஆசீர்வாதம் (மார் பிற்கு நேரே உள்ளங் கையை வளைத்துக்கொண்டு)

கந்தையா:- நான் உம்மை ஆசீர்வாதம் கேட்கவில்லை. அது உமக்கே இருக்கட்டும், எது வரைக்கும் பிரயாணம்?

சாஸ்திரி:- என்ன இப்படிச்சொல்லிவிட்டீர்? பிராமணாள் ஆசீர்வாதம் இலகுவில் எல்லோருக்கும் கிடைக்குமா?

கந்தையா:- எனக்குப் பிராமண னென்றும், மற்றவர் களென்றும், ஆசீர்வாதமென்றும், சாபமென்றும் இருப்பதாகவும், அதன் பெயருக்குத்தக்கபடியான ஏற்றத்தாழ்வுகள் இருப்பதாகவும் நம்பிக்கையில்லை. அப்படியிருப்பதெனச் சொல்லுபவர்களையும், நம்புபவர்களையும் நான் பொருட்படுத்துவதுமில்லை.

சாஸ்திரி:- அப்படியானால் இதுவெல்லாம் உலகத்தில் எப்படி தொன்று தொட்டு நடந்து வருகிறது?

கந்தையா:- உலகம் என்று எதைச் சொல்லுகிறீர்? நீர் வசிக்கும் இடத்தையா? மற்றுமுள்ள 5 கண்டங்களின் நிலப்பரப்புகளையும் சேர்த்தா?

சாஸ்திரி:- மற்ற விஷயமெல்லாமெதற்கு? முதலில் நாம் வசிக்குமிடத்தின் நடப்பைக் குறித்தே சொல்லும் பார்ப்போம்.

கந்தையா:-, உலகமே இன்னதென்று அறியாத உமக்குப் பிரமணாளென்றும், ஆசீர்வாதமென்றும் வீண் ஆரவாரமெதற்கு?

சாஸ்திரி:- நான் என்ன ஒன்றும் அறியாதவனென்று நினைத்துக் கொண்டீரோ?

கந்தையா:- உலகமே அக்கிரகாரத்துக்குள்ளிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிற உம்மோடு என் வீண் வாதம்.

சாஸ்திரி:- என்ன நீர் நம்மை நிரக்ஷரகுக்ஷி என்று நினைத்து விட்டீர் போலிருக்கிறது. நான் இந்த 20, 25 வருஷங்களாக எவ்வளவோ சிரமப் பட்டு வீடு வாசல், தாய் தகப்பன் முதலியவர்களை எல்லாம் விட்டு விட்டு தன்னந் தனியாக இருந்து காவிய நாடக அலங்காரம், வியாகரணம், தர்க்கம், மீமாம்சம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களை சாங்கோபாங்கமாக ஓதி பரீக்ஷையில் முதற்றரமாகத் தேறி பரிசுகளும் கூட பெற்று வித்வ சிகாமணி என்ற பட்டமும் பெற்றிருக்க இப்படி நினைத்து விட்டீரே.

சுந்தையா:—உங்கள் வாசிப்பில் உலகத்துக்கு ஏதாவது இலக்கணம்சொல்லப்பட்டிருக்கின்றதா? அது விளங்கும் படி யாராவது கற்பித்திருக்கிறார்களா?

சாஸ்திரி:—உலகம் உலகம் உலகத்தையே கட்டியழுகிறீர். உலகத்தைப்பற்றி பூகோள ககோள சாஸ்திரங்களில் விசதமாகச் சொல்லியிருக்கிறது. அதைப்பார்த்தால் எல்லாம் தெரிந்துவிடும். அதென்ன ஒரு காவியம் வாசிக்கும் சிறுவன் பார்த்தாலும் தெரிந்து விடும். நீர் அதை ஒரு பிரமாதமாக நினைத்துக்கொண்டு வாதிக்கிறீரே.

கந்தையா:—நான் உமக்குத் தெரியுமா என்றுதானே கேட்டேன். எதிலிருக்கிறது, யாருக்கெல்லாம் தெரியும் என்று கேட்கவில்லையே. நீர்தர்க்க சாத்திரமும், மற்ற சாத்திரமும், சாங்கோபாங்கமாக வாசித்த வித்வசிகாமணியாயிற்றே, இப்படித்தான் உம்ம சங்கதிகளிருக்கும். எதற்காக வீண் வாதம்? போதும் சும்மாயிரும்.

சாஸ்திரி:—என்னைய்யா இருக்க இருக்க மிகவும் கேவலமாக எண்ணி விட்டீர், தர்க்க சாஸ்திரத்தைப்பற்றி உமக்கென்ன தெரியும்? எல்லாவற்றையும் அலட்சியமாக நினைத்து விட்டீரே.

கந்தையா:-உம்முடைய தர்க்கமும், வியாக்யானமும், வேதாந்தமும், காவிய நாடகாலங்காரமும் எனக்கு வேண்டாம். அதையும், அதை வாசித்த உம்மையும் நீரே பெருமை பாராட்டிக்கொள்ளும். எனக்கு அவை ஒன்றும் வேண்டாம்.

சாஸ்திரி:-ஆனால் எதுதான் உமக்கு வேண்டியது?

கந்தையா:- மக்களுக்குள் ஏற்றத்தாழ்வை யுண்டாக்கி அவற்றால் சில சோம்பேறிக்கூட்டத்தார் வயிறு வளர்த்து வருவது முதலில் ஒழிந்து, எல்லோரும் ஒரு குடி மக்களென்ற உணர்ச்சியும் ஒற்றுமையும் வளர்ந்து வாழவேண்டும்.

சாஸ்திரி:- ஜாதி பேதமே கூடாதென்கின்றீரா?

கந்தையா:- ஆமாம் (அழுத்தம் திருத்தமாக)

சாஸ்திரி:- ஓ, ஓ! நீர் தற்காலம் கலியின் மகிமையைக் காட்டி மெய்ப்பிக்க பிறந்த பாஷாண்ட மதத்தினரோ! சரி, சரி. உம்மோடு பேசியதற்கும், பார்த்ததற்கும் பிராயச் சித்தம் செய்து கொள்ளச் சொல்லியிருக்கிறது?

கந்தையா:- எதற்காக?

சாஸ்திரி:- நீங்கள் எல்லோரும் பூர்வ ஜென்மத்தில் சண்டாளர்களாக இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒரு பார்ப்பனனைப்பார்த்து அவனையும், அவன் கஷ்டப்பட்டு வாசித்தவைகளையும் கேவலமாக நினைப்பீர்களா?

கந்தையா:- நீர் என்னை முன்ஜென்மத்தில் சண்டாளனென்று சொல்லும் சமயத்தில் எனக்குச் சுயமரியாதையும், பலமும், வீரமும் இருக்கும்போது அத்தகைய சொல்லையும் கேட்டு உம்முடைய விஷயத்தில் எனக்குக் கோபம் வராமல் பரிதாபமுண்டாகிறதே. இதற்கென்ன காரணம் என யோசித்தால் அந்தக்காலத்தில் நீர் எனக்குப் பிள்ளையாகப் பிறந்

மனிதனும், விடுதலையும்.

அத்தியாயம் 1.

மனிதனும் பிராணியும்.

(ரயினர் டிபோர்வோட்)

ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்ததை விட, சென்ற 100 வருஷங்களில் உலகம் அதிகம் முன்னேறிச் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இயற்கை சக்திகளை மனிதன் தனது சுகானுபவங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொண்டிருப்பதை மட்டும் பார்த்தால் இது ஓரளவு உண்மையானதே; ஆனால் அது முழு உண்மையல்ல.

இயற்கை சக்திகளை மனிதன் சாதகப்படுத்திக்கொண்டதினால் மனித வாழ்க்கை மிக்க முன்னேற்றமடைந்திருப்பது மெய்யே. நூறு வருஷங்களுக்கு முன் மிகச் சிலர் மட்

திருக்கலாம். புத்திர வாத்சல்யம் உம்முடைய விஷயத்தில் அநுதாபம் காட்டவேண்டி வருகிறது.

சாஸ்திரி:- என்னடா சூத்திரப்பயலே! என்னைச்சண்டாளனுக்கு மகனென்று சொல்லி விட்டதோடல்லாமல் என் விஷயத்தில் வாத்சல்யமாம், பரிதாபமாம், அநுதாபமாம். நீயா எனக்குத் தகப்பன்?

கந்தையா:-நான் தகப்பனானால் நானிறந்தால் என் சொத்தெல்லாம் உமக்குத்தானே சேரும். நீர் கலியாணமாகாமலிருந்தாலும், காயலானாலும், பட்டினி கிடந்தாலும் அவைகளைப்பற்றி எனக்குத்தானே அதிக கவலை? இப்படியிருக்கிற என் மீது உமக்கேன் இவ்வளவு வருத்தம்? என்னைச் சொன்னது போல் உம்மைச் சண்டாளனென்றும் சூத்திரனென்றும் இழிவையுண்டாக்கும் சொற்களையாவது பேத புத்தியையுண்டாக்கும் பதங்களையாவது சொன்னேனா? எதற்காகப் பொங்கி வழிகிறீர்?

சாஸ்திரியார் பிறகு தன்குற்றத்தை யுணர்ந்து வருந்துவதாகச் சொல்லி தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

டும் அநுபவித்து வந்த சுக சௌகரியங்களை இப்பொழுது அதிகப் பேர் அநுபவித்து வருகிறார்கள்.

முன்னேற்றத்துக்குக் காரணம்.

உடல் வளர்ச்சியை மதியாமல் அறிவு வளர்ச்சியில் மக்கள் அதிக கவனம் செலுத்தியதே மனித சமூகத்தின் விரைவான முன்னேற்றத்துக்குக் காரணம். சுருங்கக் கூறின் நாமெல்லாம் ஹிருதய அடிமைகளாகவே இருக்கிறோம். ஜீவிதப் போராட்டம் மிகவும் கடுமையாகி விட்டது. அதில் வெற்றிபெற நமது கருத்து முழுவதையும் அடிக்கடி செலுத்த வேண்டியதாக வருகிறது. நல்ல கல்வி கற்று உடல் உழைப்பு இல்லாத வேலைகளைச் சம்பாதிப்பதே இப்பொழுது மக்களின் பொது நோக்கமாக இருந்துவருகிறது. ஆகவே இப்பொழுது உலக முழுதும் ஹிருதய அடிமைகளே மிகுந்து வருகிறார்கள்; அவர்கள் மனோசக்தி மிகவும் விருத்தியடைந்திருக்கிறது. ஆனால் தேக சக்தி விருத்தியடையவில்லை. கஷ்டமான வேலைசெய்ய அவர்களால் இயலவில்லை. ஆனால் சரியான ஹிருதய வளர்ச்சிக்கு அல்லது அறிவு வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சி இன்றியமையாததே. உடல் வளர்ச்சி திருப்திகரமாயிராவிட்டால் மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறையில் அறிவு வளர்ச்சி ஸ்தம்பித்து விடும். மற்றும் அறிவு வளர வளர உடல் வளம் குன்றி வருவதாக புள்ளி விவர நிபுணர்கள் கூறுகிறார்கள்.

விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் சாதகமான அநேக கருவிகள் தோன்றியிருப்பதினால் உடல் வளம் பொருந்தியவர்களுக்கு நாளுக்கு நாள் தேவை குறைந்துவருகிறது. ஆதலால் அவர்களும் ஹிருதய அடிமைகள் ஆக முயல்கிறார்கள். அதனால் பெரிய குடும்பங்களை உண்டுபண்ண சக்தியுடையவர்கள் தொகை குறைந்து வருகிறது. ஆகையால் விருத்தியடைந்து வரும் ஜனத்தொகையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மூளையுழைப்பாளிகளையே சேர்கிறது. அந்த மூளையுழைப்பாளர் சக்தியோ ஏற்கனவே கூறியுள்ளபடி மூன்றாவது நான்காவது தலைமுறையோடு ஸ்தம்பித்து விடுகிறது.

அறிவு சம்பந்தமாக நாம் சென்ற 100 வருஷங்களில் அதிக முன்னேற்றமடைந்திருந்தால் உடல் வளர்ச்சி விஷயத்தில் நாம் பின் நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறோமா? சராசரி வயதில் 10 வருஷம் உயர்ந்திருப்பதாக இன்ஷூரன்ஸ்

அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் வைத்திய பரிசோதனை விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருப்பதினால் அவர்களது அபிப்பிராயத்தை ஒரு ஆதாரமாகக் கொள்ளக் கூடாது. ஏனென்னில் சௌக்கியமான நிலைமையிலிருப்பவர்களையே அவர்கள் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்கிறார்கள்.

வைத்திய சாஸ்திரம் இப்பொழுது மிகவும் முன்னேற்றமடைந்திருப்பதினால் தற்காலம் பிறக்கும் குழந்தைகள் முன் கால குழந்தைகளை விட 12 வருஷம் அதிகமாக வாழும் என்று ஒரு டப்ளின் டாக்டர் கூறுகிறார். சென்ற 25 வருஷங்களில் அதற்கு முந்திய 25 வருஷங்களில் இருந்ததைவிட வைத்திய சாஸ்திரம் மிக்க வளர்ச்சியடைந்திருக்கிறதென்றும் அவர் கூறுகிறார்; நமது அறிவு வளர்ச்சிக்கு இதுவும் ஒரு ஆதாரமாகும். இத்தகைய அறிவு வளர்ச்சியினால்—உடல் வளர்ச்சியுண்டானாலும் சரி, அல்லாவிட்டாலும் சரி—மக்கள் மிகவும் விவேகிகளாகவும் கருணையுடையவர்களாயும் ஆகிவிட்டார்கள். ஆனால் வேறொரு கூட்டம் அறிவாளிகள் இப்பொழுது மிகுந்து வருகிறார்கள். அதாவது தமது அறிவு வளர்ச்சியினால் பிறரை அடிமைப்படுத்தி தமது சொந்த சுக சௌகரியங்களை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்று கூறுகிறார்கள். அவர்கள் தொகையே இப்பொழுது உலகத்தில் அதிகமாக இருந்துவருகிறது.

அறிவு வளர்ச்சியும், விடுதலையும்.

உலக சரித்திரத்திலே இவர்கள் அதிகமானதற்கு ஏராளமான திருஷ்டாந்தங்கள் இருந்துவருகின்றன. அறிவு வளர்ச்சியடைந்தகொஞ்சப்பேர் அறிவு வளர்ச்சியடையாத பெரும்பாலான மக்களை அடிமைப்படுத்தினார்கள். எனினும் அறிவுபரவி வருவதினால் மனித சமூகம் விடுதலையடைந்து கொண்டே வருகிறது. அதிக அறிவாளிகளாயும் செல்வர்களாயும் உள்ளவர்கள், தம்மைத் தவிர உலகத்தில் மற்றும் அநேகர் இருக்கிறார்கள் என்றும் உலகம் அறிவாளிகளுக்கும் செல்வர்களுக்கும் மட்டும் தோற்றுவிக்கப்படவில்லையென்றும் மற்றவர்கள் க்ஷேம லாபங்களுக்கு நாம் ஒவ்வொருவரும் ஜவாப்தாரிகள் என்றும் எனவே அந்தஸ்தை கவனியாமல் எல்லாருக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டுமென்றும் இப்போது வர வர உணரத்தொடங்குகிறார்கள்.

மக்கள் சமூகத்திலே—முக்கியமாக தற்கால நாகரிகத்துக்கு ஏற்ற சுகாநுபவங்களையெல்லாம் அநுபவிக்க அதிக வசதியுடையவர்களுக்குத்தான் இயலும் என்ற சுயநலஉணர்ச்சியே அதிகமாகக்காணப்படுகிறது. சாமானியமனிதன் தன்னை விடக் கீழ் நிலையிலிருப்பவனைப்பற்றிக் கடுகளவுகூடச் சிந்திப்பதில்லை. தான் பிறப்பதற்கு 9 மாதங்களுக்கு முன்னே ஒரு குண்டூசி முனையளவுள்ள இந்திரிய நீர்த்திவலையாக இருந்த உண்மையை அவன் அறிவதில்லை. சீமான்களான பெற்றோர்களுக்கு அவன் குழந்தையாகப் பிறந்தால் வளர்ப்பு, கல்வி விஷயத்தில் அவனுக்கு நல்ல நிலைமையே ஏற்பட்டிருக்கும். ஆனால் யுக்த வயதையடைந்தவுடன் தன்னை ஒரு விசேஷப்பிறவி என்றும்மற்றவர்களைவிட மேலானவன் என்றும் எண்ணிக்கொள்கிறான். ஆனால் மற்றவர்களும் அவனைப் போல் தோன்றியவர்களே. அவனும் மற்றவர்களைப்போல் கடைசியில் மண்ணோடு மண்ணாய்க் கலந்து போகக்கூடியவனே என்பதை அவன் உணர்வதில்லை.

மனிதனும் ஒரு பிராணியே; அதை அவனால் மறுக்க முடியாது. ஆண், பெண் சேர்க்கையினாலேயே அவன் உலகத்தில் தோன்றினான். அவன் தற்கால நிலையை அடைய அனேகமாயிர லக்ஷம் வருஷம் பிடித்தது.

பரிணாம வாதம்.

டார்வினின் பரிணாம வாதம் மிகவும் தர்க்கத்துக்கு இடமானதாயிருந்தது. மனிதக் குரங்குக்கும் மனிதனுக்கும் சம்பந்தம் உண்டென நிரூபுவது மனிதனுக்கு மிகவும் வெறுப்பாகவே இருந்தது. மனிதன் மிருக தசையிலிருந்து எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறான் என்பதற்கு அந்த வெறுப்பே ஒரு காரணம். எனினும் மனிதனுக்கும் மனிதக் குரங்குக்கும் அதிக ஒற்றுமை இருப்பதை நமக்கு மறுக்க முடியாது. காட்டுப்புறங்களில் மனிதக் குரங்கு இப்பொழுதும் மனிதக் குரங்காகவே இருந்து வருகிறது. ஆனால் அதைபிடித்து வைத்துப்பழக்கினால் மனிதக்குரங்கு வியக்கத் தக்க விதமாய் முன்னேற்றமடைவதை நாம் பார்க்கிறோம். நாம் காணும் மாற்றம் வியக்கத்தக்கதாகவே இருக்கிறது. மனிதக் குரங்கின் மூளை அற்பமாக இருந்தாலும் சுற்றுச் சார்புகளினாலும் பழக்கத்தினாலும் அதை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்பது தெளிவாகி விட்டது. எனும்பு,

தசை, கார் முதலிய விஷயங்களில் மனிதனுக்கும் மனிதக் குரங்குக்கும் உள்ள ஒற்றுமையைப் பார்த்தால் அவை இரண்டுக்கும் ஒரு பொதுவான மூலக் கரு இருக்கவேண்டுமென்பதும் தற்கால மக்கள் மனிதக் குரங்குகளின் சொந்தக்காரர்களே என்பதும் தெளிவாகிறது.

மனிதக் குரங்கினிடம் மனிதனுக்கு மிகவும் வெறுப்பு ஏற்பட்டிருப்பதினால் மனிதன் தான் மிகவும் மேலானவன் என்று கற்பனை செய்து கொள்ளுகிறான். ஒரு நீகிரோவுக்கும் மனிதக் குரங்குக்கும் உள்ள வித்தியாசத்தைவிட வெள்ளையர்களுக்கும் நீகிரோவர்களுக்கும் உள்ள வித்தியாசம் மிகவும் பெரிதாக இருக்கிறது. ஆகவே மனிதனுக்கும் மனிதக்குரங்குக்கும் சம்பந்தம் இல்லையெனக் கூறுவதைவிட வெள்ளைக்காரர்களுக்கும் நீகிரோவர்களுக்கும் சம்பந்தம் இல்லையெனக் கூறுவதே மிகவும் நியாயமாக இருக்கும்.

நீர் நாயின் அறிவு.

பரிணாமத்தின் அடித்தட்டில் இறங்கி கடல்வாழ் உயிர்களை ஆராய்ந்து பார்த்தால் பிராணிகளுக்குள்ளும் அறிவு வளர்ச்சி யடைந்திருப்பது புலனாகும். உதாரணமாக நீர் நாய்களின் குடும்ப வாழ்க்கையை எடுத்துக் கொள்ளுவோம். ஆண் நாய் தன் ஜோடியான பெண் நாயின் மீது வைத்திருக்கும் அன்பையும் கவலையையும் பார்த்து மனிதன் பொறாமைப்பட வேண்டியதுதான். நீர் நாய்க்குட்டிகள் அழுவது குழந்தைகள் அழுவதைப்போலிருப்பதினால் மக்கள் அதைக் கொல்லத் தயங்குகிறார்கள் என்றால் அதற்கும் மனித சமூகத்துக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கவேண்டுமென்று தானே முடிவு கட்டவேண்டும்.

இந்தச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்கடற்கரைப்பக்கங்களில் வாழும் கோங் என்ற திமிங்கிலங்களைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டியது அவசியமெனத் தோன்றுகிறது. அந்த திமிங்கிலங்கள் புல் பூண்டுகளைத் தின்று உயிர்வாழ்கின்றன. அவற்றுள் சில திமிங்கிலங்களை 1560-ல் போர்த்துக்கேசியர் பிடித்து கோவாவுக்குக் கொண்டுபோனார்கள். கோவா வைஸ்ராயின் டாக்டரான டெமாஸ்பாஸ்கொஸ்என்பவர் அவைகளை அறுத்துப்பார்த்தார். அவைகளின் உள்ளுறுப்புகளெல்லாம் மனித உள்ளுறுப்புகளுக்குச் சமமாக இருக்கின்றன என்று அவர் அபிப்பிராயப்பட்டார். கிரேக்க, ரோம

புராணங்களில் கூறப்படும் கடற் கன்னிகள் கட்டுக் கதை என நாம் கூறுகிறோம். ஆனால் கிரேக்கர்களும் ரோமர்களும் டிரிட்டன்ஸ், நெரீட்ஸ் என்ற கடற் கன்னிகள் இருந்ததாக நம்பினார்கள். ஏழாவது நூற்றாண்டில் கான்ஸ்டாண்டி னோபிளில் வாழ்ந்திருந்த தியோபிலாக்டஸ் என்பவர் நீலநதியில் வாழ்ந்திருந்த ஒரு மாதிரி மச்ச கன்னியைப்பற்றி எழுதி வைத்திருக்கிறார். அதன் உடலில் பாதி மனித உருவாகவும் பாதி மச்ச உருவாகவும் இருந்ததாம். மனிதக் கருவின் கழுத்தில் செதில்கள் இருப்பது முக்கியமாக கவனிக்கத்தக்கது. அதனால் நீரிலிருந்தே உயிர் உற்பத்தியாயிற்றென்று ஊகிக்க இடமிருக்கிறது. கழுத்தில் செதில்கள் காணப்படவில்லையெனச் சிலர் கூறுகிறார்கள். எனினும் செதில்களுடனும் சிறு பிளவுகளுடனும் சில குழந்தைகள் பிறந்திருப்பதை பலர் நேரில் கண்டிருக்கிறார்கள்.

நாய்த்தலை மனிதர்.

மனிதன் தற்கால உருவத்தை அடையு முன்பு பல உருவங்களை எடுத்திருக்கிறான் என்பதற்கு சந்தேகமே இல்லை. பண்டு நாய்த்தலையுடைய மக்கள் உயிர் வாழ்ந்திருந்ததாகவும் அவர்களுக்கு பேசத்தெரியாதென்றும் குலைத்து மற்ற மிருகங்களை வேட்டையாடி ஜீவித்தார்கள் என்றும் புராதன சரித்திரக்காரர் குறித்து வைத்திருக்கிறார்கள். இதை ஆதாரமாக எடுத்துக்கூறியிருப்பவர் டீசியஸ் என்பவரே. அவர் வாலுள்ள மனிதர்கள் இருந்ததாகவும் எழுதிவைத்திருக்கிறார். மற்றும் பலர் இவ்வாறே எழுதி வைத்திருக்கிறார்கள். நியூகினியில் வாலுள்ள மனிதர் இருப்பதாக சமீபத்தில் தெரிய வந்திருக்கிறது.

மனிதக் கருவில் வாலுக்குரிய குறி காணப்படுகிறது. கடைசியில் அது முண்டி எலும்புடன் கலந்து விடுகிறது.

ஆசியாவிலே ஆல்ட்டாய் மலைகளின் பக்கத்திலே அரிமாஸ்பி என்ற ஜாதியார் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒற்றைக்கண். அந்தக்கண் நெற்றியில் இருந்ததாம். ஆனால் அவர்களை விட விநோதமானவர்கள் தலையில்லாத மனிதர்களே. அவர்களுக்கு தோள்களில் கண்கள் இருந்தனவாம். அவர்களுக்கு மூக்கும் நாக்கும் நெஞ்செலும்புக்குக் கீழே இருந்தனவாம். இவர்கள் எல்லாம் ஆசியா வாசிகள். ஆனால் தெற்கு வெனிசூலாவில் ஆறிநோகோ நதிக்குத் தெற்கே இவியா

பினோமாஸ் என்னும் ஒரு ஜாதியார் வசித்து வருவதாயும் அவர்களும் மேலேகூறப்பட்டவர்களைப்போன்ற உருவமுடைய வர்கள் என்றும் ஸர். வால்ட்டர் ராலி 16 வது நூற்றாண்டில் எழுதி வைத்திருக்கிறார். புஜங்களுக்கிடையில் தலைகள் உடைய மக்கள் இருந்ததாய் ஷேக்ஸ்பீயரும் கூறியிருக்கிறார்.

இவையாவும் பொய்க்கதை போல் தோன்றினாலும் அவைகளுக்கெல்லாம் பொதுவான ஒரு ஆதாரம் இருக்கத் தான் செய்கிறது. நாய்முக மனிதனையும் தாடியுடைய பெண்ணையும் பார்த்து நாம் இப்பொழுது வியப்படையாதது போலவே பண்டைக்கால மக்களும் அவைகளைப்பார்த்து வியப்படைந்திருக்க மாட்டார்கள்.

மனித உற்பத்தி.

முலையுண்ணும் பிராணிகளிலிருந்தே—முக்கியமாக வீட்டுப் பிராணிகளிலிருந்தே மனிதன் தோன்றியிருக்க வேண்டும். லோயர் யோசீன் காலத்து வாழ்ந்த குதிரைகளின் உடற்கூடுகளைப் பரிசோதித்துப்பார்த்து குதிரையே மனித உற்பத்திக்குக் காரணமாயிருந்திருக்குமென்று ஊகிக்கப்படுகிறது. அந்தக்காலம் 2,250000 முதல் 3,000,000 வருஷங்களுக்கு முன் இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. முதலில் பெறோக்கோடன் என்ற பிராணி தோன்றிற்றாம். அப்பால் இயோஹிப்பஸ் என்ற ஆதிக்குதிரை தோன்றிற்றாம். அப்பால் ஒரோபிப்பஸ், மேஷோபிப்பஸ், மியோஹிப்பஸ், புரோட்டோஹிப்பஸ், பினியோஹிப்பஸ், முதலியன முறையாகத்தோன்றி கடைசியில் தற்காலக் குதிரைகள் தோன்றினவாம். சிலர் ஹிப்போஹிப்பஸ், நியோஹிப்பஸ், இக்வாஸ்காபல்லஸ் முதலியவைகளைப்பற்றிக் கூறுகிறார்கள். ஆனால் மேலே கூறிய ஆறும் ஒன்றின் பின் ஒன்றாய் பரம்பரைக் கிரமத்தில் வருவதினால் அவைகளே சரியாக இருக்குமென்று தோற்றுகிறது.

மனித உற்பத்திக்கு கடலே ஏற்ற ஸ்தானமாயிருந்திருக்க வேண்டுமென்பதற்கு தக்க காரணங்கள் இருக்கின்றன. நெடுங்காலமாக பல தசைகளைக் கடந்து ஓர் சிற்றறையில் வாழ்ந்த உயிர் மச்ச உருவையடைந்தது. அப்பால் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய பிராணியின் உருவெடுத்தது. அப்பால் சிற்றுருவுடைய நாற் கால் பிராணியாயிற்று.

மெஸோஜாயிக் யுகத்திலுள்ள முலையுண்ணும் பிராணிகள் எல்லாம் சிற்றுருவுடையனவாகவே இருக்கின்றன. அக்

முட்டுக்கட்டை.

"ஏயல்"

சுய சிந்தனா சக்தியின் வேகத்தை வைதீகர்கள் எப்பொழுதும் தடுத்தே வந்திருக்கின்றனர். உலக சரித்திரத்தில் இதற்குப் போதிய சான்றுகள் காணக்கிடக்கின்றன. 17-வது நூற்றாண்டு வரையிலும் ஐரோப்பாவில் வைதீகம் தலைவிரித்துத் தாண்டவமாடி வந்தது; அதன் பிறகு அங்கு தோன்றிய புரட்சிகள் மனித உணர்ச்சியை மாற்றிவிட்டன. சுயேச்சையான அபிப்பிராயங்களுக்கும் சிந்தனைகளுக்கும் இடமளிக்கப்பட்டது. அதன் பயனால், லௌகீக வாழ்க்கையில் மனிதன் அதிக வசதிகளைத் தேடிக்கொள்ள முடிந்தது. அறியாமையெனும் கொடிய இருள் அகன்றது. ஆனால், ஆசியாவிலோ நேற்று வரையிலும், இன்றுங்கூட சகல விதமான துறைகளிலும் வைதீகம் முட்டுக்கட்டை போட்டே வருகின்றது.

அரசியல் ஆதிக்கம் உடையோர் எக்காலத்தும் வைதீகர்களுடைய முட்டுக்கட்டைக்குப் பக்கபலமாகவே யிருந்து வந்திருக்கின்றனர்; அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் நாடுகளில் இந்நிலமை சிறிதளவும் மாறுபடாமல் இன்றும் இருந்து வருகின்றது.

தக்காலம் ஊர்வனவற்றின் காலமாயிருந்ததினால் மாமிசமுண்ணும் ஊரும் பிராணிகளுக்கு அவைகளே இரைகளாக இருந்து வந்தன. மனித பரிணாமத்தில் இது ஒரு முக்கியமான கட்டமாகும். இந்தக் கட்டத்தில் நாற்கால் பிராணிகளிலிருந்து இரண்டுகால் பிராணிகள் பரிணாமமாயின. முலையுண்ணும் பிராணிகள் எல்லாம் சத்துருக்களுக்குப் பிடிகொடுக்காமல் தப்பித்துக்கொள்ள முயலலாயின. அச்ச உணர்ச்சியும் தற்காப்புணர்ச்சியும் மிகுந்ததினால் அவைகளின் சாயல் மூளையிலும் பதிந்தது. இது மிகவும் முக்கியமான பாகம். பிறகு மனித புத்தி விருத்தியடைந்ததற்கும் இதற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

(தொடரும்)

சுயமாக ஒன்றை ஆராய்ச்சி செய்யும் தன்மை மனித சுபாவத்தில் இயற்கையாகவே படிந்திருக்கின்றது. ஆனால் இந்த இயற்கை குணத்தை ஆழ அமிழ்த்தி மேலே மெழுகு பூசி வைத்து விடுவது பாழும் வைதீகம். மரத்தடியிலிருந்து சிந்தித்துக்கொண்டிருந்த இருவர் அம்மரத்திலிருந்து கீழே விழுந்த கனியைக்கண்டு, அக்கனி விழுந்த விஷயத்தைக் குறித்து ஆலோசிக்கத் தொடங்கினர். "கீழே விழுந்தது பெரிய பூசணிக்காய் அளவிலிருந்தால் நம் தலை நசுங்கி இறந்திருப்போமே; இந்த சூட்சுமத்தை உணர்ந்தல்லவோ கீழே படரும் பறங்கிக்கொடிக்குப் பரும் கனியையும், மேலே போகும் ஆலமரத்துக்குச் சிறு கனியையும் உண்டுபண்ணினான், ஆண்டவன்! என்னே அவன் அருள், பெருமை!" யென வியந்தான் ஒருவன். அவன் கீழ் நாட்டான்.

"மரத்தை விட்டுப் பிரிந்த கனி பூமியில் விழுவானேன்? ஏன் அப்படியே மேலே போகக்கூடாது? ஏதோ ஒரு சக்தியல்லவா கீழேயிழுக்கிறதுபோல் தோன்றுகின்றது" என்று சிந்தித்தான் மற்றவன். அவன் மேனாட்டான். முதலாவது சிந்தித்தவன் வெளிச்சத்தைப் புறக்கணித்து வைதீகத்தில் ஆழ்ந்தவன். அதனால் தான் அவன் சிந்தனா சக்தி உலக விஷயத்தை மறந்து தெய்வ சக்தி மீது சென்றது. தென்னை, பனைபோன்ற பெரிய கனிகளை உடைய உயர்மரங்களிலிருப்பது ஆச்சரியம் அவன் புத்திக்கு எட்டவில்லை! வைதீகமும் தெய்வீகமும் இவ்வுண்மையை மறைத்தன; வண்டியில் பூட்டின குதிரை எதிரே தோன்றும் பாதையை மட்டும் பார்த்துச்செல்வது போல. மேலும் அவனது சிந்தனையில் கோழைத்தனத்தின் குறியையுங் காண்கின்றோம்.

வைதீகர்களுடைய கண்டனைகளையும், நிந்தனைகளையும், பரிகாசங்களையும் சிறிதும் சட்டை செய்யாமல் பகுத்தறிவு உணர்ச்சியானது மேனாட்டில் வளர்ந்தோங்கி இன்று வைதீகர்களும் அதன் பலனை அடைந்து சுகிக்குமாறு செய்திருக்கின்றது.

வைசூரி போடுவது பெரியம்மையென்ற எண்ணம் ஊறிப்போயிருக்கும் மனிதர்கள் மிகுந்த ஒரு நாட்டில் அதற்குரிய பரிகாரத்தைத் தேட முடியுமா? ஆனால் வைசூரிக்குத் தக்க மருந்து அம்மை குத்தல் தான் என்பதைக்கண்டறிந்தவர் ஜென்னர் என்ற ஆங்கில டாக்டராகும். பதினாறு வருஷகாலம் இவர் இடைவிடாது தமது ஆராய்ச்சியை நடத்தி வந்தார். அதற்குப்பிறகு தான் அதை வெளிப்படுத்தினார். பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு அம்மை குத்தி வைசூரியைக் குணப்படுத்தியதைக் கண்ட பிறகும் அதைப்பலர் ஒப்புக்கொள்ள மறுத்து விட்டனராம். 'அம்மை குத்து'ம் மருந்து பசுவின் உடலிலிருந்து எடுக்கப்பட்டதால், பசு

வைப்போல் அவரது படத்தைப் பத்திரிகைகளில் பிரசுரித்துப் பரிகசிக்கவுஞ் செய்தார்கள். முடிவில் அவரது சிகிச்சை முறை யேற்றுக்கொள்ளப்பட்டது. ஜன சமூகத்துக்கு நன்மை புரிந்த பெரியார்களில் இவர் முதன்மை ஸ்தானம் வகிக்கின்றார்.

இனி பிரயாண வசதிகளின் முன்னேற்றத்தைக் கவனிப்போம். ஒரு நூறு வருஷகாலத்தில் என்னென்ன மாறுதல்கள்? அயல்நாடுகளுக்குக் கடல் கடந்து பிரயாணஞ் செய்வதென்றால் குடும்பப் பொறுப்புகளை மற்றொருவரிடம் ஒப்புவித்துவிட்டு, தாயாதிகளால் எள்ளுந்தண்ணீரும் இறைக்கச் செய்தே புறப்படுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றோமல்லவா? திரும்பி வருகிறதில் அவ்வளவு நம்பிக்கை! ஆனால் இன்றைய தினம் மணிக்கு 20 மைல் வேகத்தில் மோட்டார் ஓட்ட முடியுமா என்றுசோதனை பார்க்கின்றோம். இன்னும் கொஞ்ச நாளில் நமது சுவாமிகளுக்கும் கூட யந்திர வாகனங்கள் அமைந்துவிடுவது நிச்சயம். மின்சார விளக்குகள் அவியா தீபங்களாக நமது கோவில்களை அலங்கரிக்கவில்லையா?

சுமார் எழுபது வருடங்களுக்கு முன் ரயில் வண்டி ஓட்டுவதற்கு எவ்வளவு எதிர்ப்பு இருந்ததென்பதைக் கவனிக்கும் பொழுது, எவ்வளவு வேகத்தில் சீர்திருத்தம் முன்னேறி வருகின்றது என்பது விளங்கும். இடைக்காலத்தில் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கள், முட்டுக்கட்டைகள், அதைரியம் இவற்றையெல்லாம் நாம் கவனிப்பதில்லை. இன்னும் வேகத்தில் செல்லுவதெப்படியென்பதிலேயே இன்றுள்ள ஆராய்ச்சிக்காரர்கள் முனைந்து நிற்கின்றார்கள். நாளுக்கு நாள் வேகமும் அதிகரித்தே வருகின்றது. ஒரு வாகனம் வேறு எவ்வித உதவியுமின்றி, சுயமாக நகர முடியும் என்பதை ரூபித்தவர் ஒரு பிரஞ்சுக்காரராகும். இவர் உண்டுபண்ணின வாகனம் பாரிஸ் நகரில் 170-ம் ஆண்டில் ஓட்டிக் காண்பிக்கப்பட்டது. அதன் வேகம் மணிக்கு மூன்று மைல்! நல்ல வேகமல்லவா? ஒருவாகனமென்றால் அதை குதிரை, கழுதை அல்லது மனிதன் இழுக்க வேண்டும், தானாக இயங்குகின்றதென்றால், கண்ணுக்குத் தெரியாத பைசாசந்தான் இழுத்துச் செல்லவேண்டுமென்று அக்காலத்து மனிதர்கள்—வைதீகர்கள் நினைத்தார்கள். ஆகவே, "இதை ஓட்டுபவன் ஒரு மந்திரவாதியாக, சாத்தானுடன் சம்பந்தமுடையவனாகத்தானே இருக்க வேண்டும்! இவன் மனிதனுக்கும் கடவுளுக்கும் ஆகாதவன்; ஆதலால் இந்த வாகனத்தில் ஏறக்கூடாது; இதை ஓட்டவும் கூடாது. இவனை ஒழிப்பதெப்படி" என்கின்ற இந்த ஆராய்ச்சியிலிறங்கினார்களாம் அவர்கள்; சரியான சந்தர்ப்பமும் வாய்த்தது;

வாகனம் நேராகப்போய் ஓர் சுவரில் முட்டி மாட்டிக்கொண்டது. இதுதான் வழி யென்று அந்த மனிதனைச் சிறையிலடைத்தார்கள். பிரான்ஸ் இதன் மூலம் ஒரு 'அபாயகரமான' பேர்வழியிலிருந்து காப்பாற்றப்பட்டதாக அவர்கள் கருதினார்கள்.

இவரது முயற்சியைத் தொடர்ந்து நடத்தி வெற்றிபெற்றவர் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் என்பவர். மனிதன் பத்து மைல் வேகத்திற்கு மேல் ஓடினால் ரத்த அழுத்த அதிகமாகி, ரத்தாசயம் வெடித்து மாண்டு போவான் என்று அக்காலத்து 'பிரகஸ்பதி'கள் பயமுறுத்தினார்கள். காமன்ஸ் சபை அங்கத்தினர்கள்கூட இந்த அபிப்பிராயத்தை ஆதரித்தார்களாம்! இக்காலத்து சட்டசபை மெம்பர்கள் சாரதா சட்டத்தை எதிர்க்கவில்லையா? 10 அல்லது 12 மைல் வேகத்தில் செல்லும் ஒரு எஞ்ஜின் எவ்வளவு புகையைக் கக்கும் என்பதை கவர்ன்மெண்டார் அறிவார்களா? என்று ஒரு அங்கத்தினர் கேட்டாராம். "ரயில் பாதை போடும் திட்டங்கள் மிக அபாயகரமானவை; தேசத்தின் நலத்துக்கு விரோதமானவை" யென்று மற்றொரு மெம்பர் வெளுத்து வாங்கினாராம். "ரயில் என்ற பெயரையே நான் வெறுக்கிறேன்; எதைப்போன்று? பிசாசைப்போன்று!" என்று இன்னொரு அங்கத்தவர் வெகுண்டாராம். இதிலிருந்து என்ன தெரிகிறோம்? முன் காலத்துப்பார்லிமெண்டைத்தான் இப்பொழுதுள்ள நமது சட்டசபை மெம்பர்கள் சிலர் பின்பற்றுகிறார்களென்று, ஆங்கில எழுத்தாளர்களில் முதன்மைவாய்ந்தவராகக் கருதப்பட்ட ரஸ்கின்கூட ரயில் பாதைத்திட்டத்தை எதிர்த்துப் பத்திரிகைகளில் எழுதினாராம். ஆனால், இந்த பார்லிமெண்டு மெம்பர்களையும், எழுத்தாளர்களையும் எதிர்த்தே ரயில்பாதை மேனாட்டைச் சுற்றியதுமன்றி கீழ நாட்டிலும் பரவி, நமது தென்னாட்டிலும் புகுந்து, மக்களுக்கு மிக சௌகரியமாகப் 'புண்ணியங்'களையும், 'சொர்க்க பதவி'களையும் சம்பாதித்துக்கொடுத்துவருகின்றது! வைதீகர்கள் முடிந்த மட்டும் எதிர்ப்பார்கள்; பின் அந்தச் சீர்திருத்தத்தைத் தங்களுக்குச் சாதகமாகவே உபயோகித்துக்கொள்வார்கள். இதுதான் அவர்கள் உழைப்பின் ரகசியம்! மூட்டுக் கட்டையின் முடிவு!

கப்பலேறிக் கடல்கடப்பது பாவம் என்பார்கள், தப்பித் தவறிப் பிரயாணஞ்செய்தால், பிராயச்சித்தஞ்செய்து விமோசன மடையலாமென்பார்கள். பலர் பிரயாணஞ்செய்ய ஆரம்பித்தால், தாங்களும் அக்கரை சீமை சென்று அங்கும் கோவில் கட்டி 'சுங்கம்' வசூலிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள் பாருங்கள். வைதீகத்தைக் காப்பாற்ற கங்கா ஜலமும், களிமண்ணுங்கூட கப்பலேறுகிறது. கப்பல் பிரயாணஞ்செய்யும் மனிதன் தீட்டாகிறான்;

தலைவிதி, மறுஜென்மம், கர்மம்.

(விருதை விதுரன்)

நமது நாட்டில் குறிப்பாக தென்னிந்தியாவில் தலைவிதி பைத்தியம் அதிகம். தலைவிதி யென்பது உண்மையா? மனித வாழ்க்கையில் பொருந்தியிருக்கிறதா? அவ்விதம் இருக்க முடியுமா? என்பதைப்பற்றியும், மறுஜென்மம் என்பது உண்டுதானா? என்பதையும் இங்கு ஆலசிப்பார்க்கப்படும். அது புத்திக்கும், உலக மானுஷீகத்திற்கும் ஒத்ததாய் இருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள். ரிஷி முதலிய பெரியோர் வாக்கு ஆதலால் எல்லாம் உண்மை, அப்படியே முழுவதும் உண்மை, நம்பவேண்டும் என்று வற்புறுத்தவில்லை.

முதலாவதாக தலைவிதி யென்பதைப்பற்றி பெரியோர் களெனப்படுவோர் வேலையற்று பாடியிருப்பதையும் அதை

ஆனால் இந்த கங்கா ஜலமும் களிமண்ணும் மட்டும் தீட்டாவதில்லை. அதில்தான் வைதீகத்தின் உயிர்நாடியிருக்கின்றது.

சிந்தனா சுதந்தரம், அபிப்பிராய சுதந்தரம் ஆகியவை நவீன விஞ்ஞான முற்போக்குக்கு ஆதாரமானவை. இவ்விரு சுதந்தரங்களால் ஏற்படும் பலன்களை மனிதன் அனுபவித்து அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்து விட்டான். இவற்றிற்கு முட்டுக்கட்டை போடுவதால், ஒரு வருஷத்தில் ஏற்படும் நன்மை நூறு வருஷத்திற்குப் பிறகு ஏற்படுகிறது என்ற நஷ்டத்தைத்தவிர வேறு அதை அப்படியே தடுத்துவிட முடியாது என்பதையும் மனிதன் உணர்ந்து கொண்டான். கடவுளைச் சொல்லி, பயங்காட்டி, பிசாசை சம்பந்தப்படுத்தி மனிதனுடைய ஆராய்ச்சி சக்தியைத் தடுப்பது இனி இயலாத காரியம். விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்பு பழய நம்பிக்கைகளெல்லாம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. சூரியன் முன் பனி எம்மட்டு? மனிதனுடைய பெரிய எதிரியான அறியாமை குழி தோண்டிப் புதைபட்டு வருகின்றது.

உதாரணத்திற்குப் பண்டிதர் முதல் பாமரர் வரை எடுத்துப் பாடிக்கொண்டு, நாமென்ன அவர்களுக்கும் மேலானவர்களா? என்று சேரம்பேதிஞானம் பேசிக்கொண்டு திரிகின்றனர். எப்படி யெனில்,

> ''இட்டமுடன் என்தலையில் இன்னபடி யென்றெழுதி
> விட்ட சிவனும் செத்து விட்டானோ..........''

என்பதாக ஔவை பாடியிருக்கிறாளாம். அதுவும் எப்பொழுது? அவளது தாய் அவளைப் பெற்றவுடன் வளர்க்கச் சக்தியற்றவளாய் குழந்தையைப் பார்த்து பிரிந்துவிடப் போகிறோமே என்று கலங்கி நிற்கும் சமயத்தில் மேற்கண்டமாதிரி, பாடிற்றாம். என்ன ஆச்சரியம்! குழந்தை பிறந்த அந்தச் சமயத்திலேயே பேசுமா? இது பொருந்துமா? யோசித்துப் பாருங்கள். தெய்வீகத்தன்மையை புகுத்துவதற்காக எழுதிய சூழ்ச்சியல்லாது வேறென்னமாகத்தான் இருக்க முடியும். இவையெல்லாம் ஒரு புறம்தள்ளி அப்பாட்டை உண்மைஎன்று ஒத்துக்கொண்டாலும் சிவன்எழுதியதாக வல்லவோ பாட்டில் கூறியிருக்கிறது. சிருஷ்டிக்கிறதுபிரம்மா வென்றல்லவோ சொல்லப்படுகிறது. மும்மூர்த்திகளும் ஒன்று என்றாலும் தொழில் எல்லாம் அவரவருக்கு வேறு என்று தானே புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் அருணாசல புராணத்தில் சிவன் மற்ற இருவருக்கும் பெரியவன் என்றும் மற்ற இருவர்களால் அடியும், முடியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறுகிறதே. அப்படியானால் மூவரும் வெவ்வேறு என்றுதானே அர்த்தமாகிறது. இல்லையானால் இவ்விடத்தில் புராணம் பொய்யாகிறதல்லவா? இப்படிச் சொல்வதானால முன்னோர் நூலை எப்படித்துரும்பென இகழ்வதாகும்? நிற்க,

பிரம்மா எழுதுவதெல்லாம் எதைக்கொண்டோ (தற்கால பிரம்மாவானால் பௌண்டன் பேனா கண்டு பிடிக்கப்பட்டு உபயோகித்திருப்பது தெரியவரும்) ஆனால் நமது தெய்வங்களுக்கெல்லாம் எழுதுவதற்கு உபயோகிப்பது எழுத்தாணியாகத்தானிருக்கும். எனெனில் ''ஆகவங்கூர் எழுத்தாணி தன் கோடாக எழுதும் பிரானை'' என்னும் பாடலால் தெரிய வருகிறது. எழுத்தாணியைக்கொண்டு மண்டையோட்டில் எப்படித்தானெழுதுவரோ தெரியவில்லை.

பாழும் நமது நாட்டு பழைய மௌடீகங்கள் தாங்கள் உபயோகப்படுத்தும் சமான்களையே தான் தெய்வங்களும்

உபயோகிக்கின்றன என்பதெண்ணம். இதைத் தெரிந்து கொள்ளாமல் நமது நாட்டில் அலைகின்றனரென்பது தெரிய வருகிறதல்லவா? சரி; இன்ன இன்னபடி தான் நடக்கு மென்றுதான் எழுதி விட்டாரே. பின் அதன்படி தானே நடக்கும். எதற்காக கலி முற்றி விட்டது, பெரியோர் சொல்லை மதிப்பார் இல்லை, முன்னோர் நூலைத் துரும்பென மதிக்கிறார்கள், தெய்வத்தினிடத்து நம்பிக்கை அற்றுவிட்டது என்று பண்டித மணிகளெல்லாம் கதறவேண்டும். இவ்வாறு உலகில் கதறித்திரியும்படி உங்கள் தலையில் எழுதிவிட்டான் போலும். வெகு நேர்த்தி! நேர்த்தி!!

இவை யொருபுறமிருக்க, இன்னொரு அடிகள் "அழுதாற் பயனென்ன..............பங்கயத்தோன் எழுதாப்படி வருமோ........" என்று பாடியிருக்கிறார். ஒருவன் தலையில் கொலை செய்வான் என்றெழுதியிருந்தால் "தலைவிதி" நியாயப்படி அவன் வாழ்நாளில் கொலை செய்யத்தானே செய்வான்? அவனை நரகத்தில் போடுவதென்னனம்? இது நீதிக்கு பொருத்தமாகிறதா? யோசித்துப் பாருங்கள். தகப்பன் மகனை வீட்டிலேயேயிரு படிக்கப்போக வேண்டாம் என்றால் மகன் வீட்டில் தானேயிருப்பான். நீ என் படிக்கப்போகவில்லை என்று தண்டிப்பது நியாயமா? மற்றும் "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" "விதியின் பயனே பயன்" என்பனவெல்லாம் எதைக்குறிக்கின்றன? இவ்வாக்கியங்களால் தான் நமது நாட்டு ஜனங்கள் வெகு மோசம் போகின்றனர். எப்படியெனில், ஒருவன் ஒரு காரியமாகப் போக ஆங்கு ஏதோ அசந்தர்ப்பத்தால் ஏதாவது எதிர்மாறாக முடிந்தால் அவன் தலைவிதிப்படிதான் முடியுமென்று சோர்ந்து மறுபடியும் முயற்சிக்காமல் விட்டு விடுகின்றான். இத் தலைவிதியால் தான் நமது நேரங்கள் வீணாவதுடன் வறுமையும் மேலிடுகிறது.

"அன்றெழுதியதை அழித்தெழுதப் போவதில்லை" என்றால், பின் பக்தியாலோ, மற்றெதினாலோ அதாவது தேங்காய், பழம், கூட ஆராதனை, சகஸ்ரநாம அர்ச்சனை முதலிய லஞ்சங்களால் நீக்க முடியுமா? பின் ஒரு பாடலில் "சிவாய நம வென்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது உண்மையாக வேண்டுமானால் அவ்விதம் சிந்திப்பவர் மண்டையோட்டில் அபாயமே கிடையாது என்று எழுதப்படவேண்டும். இல்லை

யேல் "அன்றெழுதியதை அழித்தெழுதப்போவதில்லை" என்பது இவ்விடம் பொய்யாகிறது. ஆகையால் முன்னுக்குப்பின் முரணாகிறதல்லவா. நமது முன்னோர் நூலை துரும்பென மதிக்கிறார்கள் என்று கூறும் பண்டிதமணிகள் முன்னோர் நூலின் வள்ளல்களை அறிவாரா?

தலைவிதி என்பதின் யோக்கியதையைப் பார்த்தோம். இரண்டாவதாக மறுஜென்மம் என்பதைக் கவனிப்போம். மக்களில், அதுவும் இந்துக்களில் மறு ஜென்மம் உண்டு என்ற பலமான குருட்டு நம்பிக்கை உண்டு. மறு ஜென்மம் என்னவென்று கவனிக்கப்புகின் ஒருவன் பிறக்கும்பொழுது இன்ன காரியங்கள் உன் வாழ் நாளில் நிறைவேற்ற வேண்டுமென்று தலையில் எழுதப்பட்டு அதன்படி காரியாதிகள் செய்தற்கு அவன் மரணமடைந்த பின் செய்திருக்கும் காரியாதிகளுக்குத் தக்கபடி விலங்குகளிலோ, தாவர வர்க்கமாகவோ, அல்லது மானிடர்களில் தாழ்மையாகவோ இல்லையேல் அரசனாகவோ பிறப்பிக்கப்படுகிறான் என்று சொல்லப்படுவது புலனாகிறது.

மற்றும் துறவிகளெனப்படுபவர்களும், கடவுளை நேரே கண்டவர்களென, புஸ்தகம், பேப்பர் "விபரபா" பண்டிதர்களால் போற்றப்படுபவர்களும் பாடியிருப்பவைகளாவது "முன் செய்த தீவினையால் மூண்டதோ" "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்று கலங்கியிருக்கின்றனர். இவைகளைப்படித்தவுடன் நமது ஜனங்கள் பயந்து சாகின்றனர். உடனே என்ன செய்வதென்று நடுங்கி பிறவிவாராமல் தடுப்பதற்கு மார்க்கமென்ன வென்று பரிகாரம் தேட, வாழ்க்கையில் வெறுப்புற்றதாக மனதில் எண்ணிக்கொண்டு புறப்பட்டு விடுகின்றனர். உடனே என்ன எதிர்ப்படுகின்றது? காசியில் இறக்க "முக்தி" சிதம்பரம் தெரிசிக்க "முக்தி" என்பதை கேள்விப்படுகின்றனர். கடன்பட்டாவது மேல்கண்ட பணம் விழுங்கும் பாதாளங்களுக்குப் போகின்றனர். போய்விட்டு வந்து வாங்கின கடன் தீர்க்க மண்டை மயிர் வழுக்கை விழும் வரை உழைத்தும் தீர்க்க முடியாமல் சாகின்றனர். இது தான் பிறவியே வாராமல் தடுப்பதின் வழிகளில் ஒருவகை. எப்படி இருக்கின்றது சங்கதி?

மற்றும் "புல்லாகிப்பூடாகி" என்றும் "அன்னை எத்தனை எத்தனை அன்னையோ......இன்னும் எத்தனை எத்தனை ஜென்மமோ........" என்ற பாடல்களால் மறுஜென்மத்தைப்பற்றிய பயம் எவ்வளவு தூரம் ஆணியடித்திருக்கிறது என்பது தெரியவரும்.

இதனால் மனிதன் கடவுள் கட்டளைப்படி செய்த காரியாதிகளுக்கு என்ன வெல்லாமோ பிறவி கிடைக்கிறது என்பதாகிறது.

நெல்லைத்திருடினவன் எலியாகப் பிறப்பான் [மனு]

கடவுள் கட்டளை இருந்தால் தானே நெல்லைத்திருட முடியும்? எலியாகப் பிறப்பிக்க என்ன நியாயம்? இதை ஒருபுறம் தள்ளி அவ்வாக்கியத்தின்படியாகவே வைத்துக்கொண்டாலும் எலிக்கு என்ன வேலை? ஆட்கள் விழித்திருக்கும்போதே கண்ணைப் பார்த்துத் திருடுவது தானே. முன் திருட்டுக்குற்றம் நீங்குவது எப்பொழுது? எலியாக இருக்கும் இப்பொழுது திருடுவதற்குப் பரிகாரம் எப்படியோ? சிருஷ்டி கர்த்தாவுக்கு இருக்கும் அறிவே அறிவு! எலியாக இருக்கும்போது முன் ஜென்மத்தில் திருடினதினால் தான் இப்பிறவி வந்தது என்ற ஞாபகம் உண்டாயிருக்குமானால் இப்பொழுது திருடுவானா? இது தான் நீதிபோலும். "தற்கால நீதிஸ்தலங்களில் நியாயம்பெற வேண்டுமானால் தங்கக் கையும் இரும்புக்காலும் வேண்டும்" என்று சமீபத்தில் செட்டி நாட்டில் தேசீயத்தின் பேரால் கொள்ளையடித்த தேசபக்தர் சொன்னதாக நெற்றியில் எழுதிக்கொண்டு திரியும் அன்பர்களுக்கு, தற்கால நீதிஸ்தலத்திலாவது ஒரு மனிதனை நீ இன்னின்ன குற்றம் செய்தாய் அதற்கு இன்னின்ன தண்டனையென்றாவது தெரியப்படுத்துகிறார்களே! கடவுள் விஷயத்தில் அது கூடயில்லையே என்பது தெரியாதுபோலும்.

இது நிற்க; நமது உயிரானது, எப்படி புழுப்பூச்சிகளாகினது முதலில் எப்படி முன்பாகத்தைப் பிடித்துக்கொண்டு பிறகு பின்பாகத்தை விடுகிறதோ, அதே மாதிரி இன்னொரு உடலைப் பற்றிக் கொண்டுதான் பின் நமது உடலிருந்து பிரிகிறது என்று சித்தாந்தக்காரர் ஓரிடத்தில் சொல்லுகிறார்கள். பின் எப்பொழுது நகர மோக்ஷம் அனுபவிப்பதோ? இதில் எது உண்மையோ? இங்கே மனுவின் சித்தாந்தம் தவிடுபொடியாகி விடுகிறது.

வாசகர்களே! நமது முன்னோர்கள் என்பவர்களின் நூல்கள் என்பவைகளிலுள்ள செய்த வினைக்குத் தக்கபடி தண்டனை என்பதின் யோக்கியத்தையும் தாரதம்மியத்தையும் கவனியுங்கள்! தவத்தில் மிக்காரான ஆணி மாண்டவ்வியர் என்பவர் கழுவில் போடப்பட்டார், ஏனெனில் அவர் பாலகனாக இருக்கும்போது தட்டாம்பூச்சிகளைப் பிடித்துக் குச்சிகளில் சேர்த்து விளையாடினாராம். அதற்காக என்ன தண்டனை தெரியுமா?

கழுவில் போடப்படுதல். எவ்வளவோ தவம் செய்தும் நீங்கவில்லை அப்பாவம். அதுவும் அறிபாப்பாலகனாய் இருக்கும்போது (தலையில் அப்படி விளையாடு என்று எழுதியிருந்தால் தானே விளையாடியிருக்க முடியும்) செய்த சிறு குற்றத்திற்கு அப்பேர்ப் பட்ட தண்டனை! ஆனால் நேயர்களே சொல்ல நெஞ்சு திடுக்கிறது! எழுது கோல் நழுவுகிறது! ஒருவரா? இருவரா? எண்ணாயிரம் பேரைக் கழுவில் போட்ட "இரத்தப்பிரிய" கொலை பாதகக் கூட்டங்களுக்கு, சாம்பல் மந்தைகளுக்கு என்ன தண்டனை கிடைத்தது? தண்டனையா! அபசாரம், அபசாரம். என்ன பதவி கிடைத்தது! "மோக்ஷம்." கொலைஞன் ஞானசம்பந்தன் திருமணத்தின் போது பெருஞ்சோதியில் கலந்தனராம்! எப்படியிருக்கிறது வேடிக்கை. முன்னோர் நூல்படி மயிரிழைகூட தவறாத சிவநேயர்களே! உங்களின் மேல்கண்ட நூல்கள் இப்படி முன்னுக்குப் பின் முரணாகிறது தெரியவரவில்லையா?

ஜட்கா வாலர்களென்றும், டெம்பரவரிகளென்றும் தேவாரத் திருவாசகத் தமிழில் பேசும் சிவநேய கூட்டங்களே! யார் டெம்பரவரிகள்? சுந்தரமூர்த்திக்கு ஒரு ராத்திரி, புணர்ச்சிக்குப் பரவை நாச்சியை கூட்டி வைக்க தூது நடந்த சிவனை, நரபலி வாங்கும் சிவனை, தாருகா வனத்து ரிஷிப் பெண்களின் சேலையின் தலைப்பைப் பிடித்துத்திரியும் சிவனை, நேயராகக் கொண்ட உங்களின் தாயை "பட்டிசைந்த அங்குசாள்" என்று வாய்நிறையப் பாடும் உங்கள் வாயில் வேறு எவ்வித வார்த்தைகள் வெளிப்படும். வயிற்றுக்கு கஞ்சிகூட இல்லாது தவித்து துடிதுடித்திருக்கும் குடும்பத்தைக் கவனியாமல் மீதியிருந்த தாலியையும் விற்று குருக்களிடம் வாங்கிப் பொசுக்கின மௌடீகத்தை பின்பற்றும் நீவிர் ஏனோ கோட்டீஸ் தாளுக்கு பணம் செலவிட்டு பிதற்றித் திரிகிறீர். அப்பணத்துக்கும் சூடம் வாங்கி கொளுத்தி அடங்குவீராகவும். இன்றேல்.........

காலையெழும்பொழுதே காப்பி என்ற எண்ணத்தில் முன்னோர் நூலை வழுவாது கடைப்பிடிக்கும் பண்டித சிகாமணிகளே! கவனியுங்கள்! ஒரு சத்திரத்தைச் சேர்ந்த தோட்டமொன்றிருந்தது; அதில் கனிதருமரங்கள் அநேகமிருந்தன. அச்சத்திரத்தில் கால் ஊனமுள்ள நடக்கமுடியாத ஒரு நொண்டி ஒருவனும் நேத்திரமட்டும் தெரியாத குருடன் ஒருவனும் தங்கியிருந்தனர். சத்திரத்தில் உள்ள மற்றவர்கள் சுலபமாகப் பழங்கள் பறித்துக்கொண்டு போவதைப்பார்த்து நொண்டிக்கு நாவில் ஜலம் ஊறிற்று. இருவரும் யோசனை செய்தனர். குருடன்

தோளில் நொண்டி உட்கார்ந்து கொண்டான். சுலபமாக பழங்கள் பறித்துக் கொண்டிருக்கும்போது சத்திரக்காரன் வந்து விட்டான், வாசகர்களே! யாரைத்தண்டிப்பது? ஆம், நீங்கள் நினைப்பது சரிதான், இருவரையும் தண்டிக்க வேண்டியது. குருடன் இல்லாமல் நொண்டிக்கு நடக்க முடியாது; நொண்டியில்லாமல் குருடனுக்கு வழிதெரியாது. அதேபோல் உடலும் உயிரும் சேர்ந்து ஒரு குற்றம் செய்கின்றன. எதைத் தண்டிப்பது? எதை நரகத்தில் போடுவது? எதை மறுபடியும் பிறப்பிக்க வைக்கிறது? உயிரில்லாமல் உடல் ஒரு க்ஷணமேனும் நிலைக்காது; உடல் இல்லாமல் உயிர் தனியே ஒரு காரியமும் சாதிக்க முடியாது. ஆனால் பண்டிதர்கள் உயிர் நீங்கியதும் சூக்ம தேகமெடுத்துக் கொள்கிறது, அதுதான் தண்டிக்கப்படுகிறது என்று சொல்லலாம். ஆனால் சூக்ம தேகத்தைப்பற்றி இங்கு சொல்லப்படவில்லை. சூக்ம தேகத்தையோ, சூக்ம உலகத்தையோ இங்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஜடமான உலகில் ஜடமான தேகத்துடன் [தூலதேகத்துடன்] செய்த காரியாதிகளுக்கு என்ன என்றுதான் கேட்கிறேன். உடலும் உயிரும் சேர்ந்து செய்ததற்கு உயிரை தண்டிப்பதென்ன நியாயம்? உயிர் அழியாததென்றல்லவோ சொல்லப்படுகிறது. காற்று ரூபமான உயிருக்கு வாதையேது? உடலில் சம்யுக்தப்பட்டால் தானே உணர்ச்சி உண்டாகிறது? நேயர்களே! யோசித்துப்பாருங்கள்.

உலகத்தில் அதிக சம்பளமுள்ளவர்கள்

U. S. A. அமெரிக்க பிரிஸிடெண்டுக்கு வருஷ சம்பளம் 75,000 டாலர் (20,0000 ரூபாய்)

ஜப்பான் முதல் மந்திரிக்கு வருஷ சம்பளம் 8000 யென். (7488 ரூபாய்.)

இங்கிலாந்து முதல் மந்திரிக்கு வருஷ சம்பளம் 5000 பவுன்கள். (66500 ரூபாய்)

இங்கிலாந்து லார்டு சான்ஸலருக்கு 8000 பவுன்கள். (106000 ரூபாய்)

இந்தியா வைஸ்ராய்க்கு 2,50,800 ரூபாய்கள்.

வேதங்கள்.

(தி. கோ. கா.)

வேதங்கள் இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் என்று நான்கு வகைப்படுமென்றும், அவைகள் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டனவென்றும், அவைகள் ஆரிய மொழியிலேயே கடவுளால் திருவாய் மலர்ந்தருளப்பட்டவைகளென்றும் நம் நாட்டு மக்களிற் பெரும்பாலசர் எண்ணுகின்றார்கள்.

இவ்வாறு எண்ணி வருகின்ற கொள்கைகள் எல்லாரா லும் ஒப்புக்கொள்ளப்படுகின்றனவாகக் காணப்படவில்லை. அவ்வாறு ஒப்புக்கொள்ளப்படாமைக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்வாம். வேதங்கள் நான்கே யென்பதைப்பற்றியாவது அதற்கு மேற்பட்டு வேதங்கள் பல வென்பதைப் பற்றியாவது அதிகமாக ஆராய வேண்டாம். வேதங்கள் கடவுள் என்பவராலேயே உண்டாக்கப்பட்டவைகளா? அல்லது கடவுள் அருள்வழி நின்ற நிறை மொழி மாந்தர் என்பவர்களால் உண்டாக்கப்பட்டவைகளா? என்பதைப்பற்றி ஆராய்வோம். உண்டாக்கப்படுவது என்னும் சொல்லுக்குப் பொருள் முன் இல்லாததொன்றைப் புதிதாகத்தோற்றுவித்தல் என்பதல்ல; முன் உள்ள ஒன்றை வேறு வேறு வகையில் மக்களுக்கு அமைத்துக்கொடுத்தல் என்பது தான் உண்மைப் பொருள். மக்கள் வசதிக்குத் தக்க உடம்பு, கருவி, இடம், நுகர்பொருள் இவைகளை அமைத்துக்கொடுப்பது எல்லாம் வல்ல ஆண்டவன் படைப்புத் தொழிலாம். உயிர்களும் ஆண்டவனைப் போல எப்பொழுதும் உள்ளவைகளே தான், உயிர்களையும் ஆண்டவனையும் போல உலகமும் உள்ள பொருளே தான் என்றால்தோன்றியும் நின்றும் அழிந்தும் வருகின்ற நிலைமாறுதல் பற்றி உலகமும் உயிரும் புதுவதாக உண்டாக்கப்பட்டவைகளென்று கொள்ளவேண்டுவதில்லை. உயிர்களுக்கு ஏற்ப உலகத்தைப் பலவகைப்படுத்தி வசதிகள் செய்கின்ற பொழுது மக்களைப்போல வரம்புபட்ட ஆற்றலுக்குள் அடங்கிக் கடவுள் படைப்புத் தொழிலைச் செய்கின்றார் என்பதில்லை.

ஆண்டவர் இவையனைத்தையும் நினைப்பு மாத்திரத்திலேயே நிகழச் செய்கின்றார் என்றும், அல்லது அவர் பார்வையிலேயே இவையனைத்தும் நிகழ்கின்றனவென்றும், அறிவாளர் எனப்படுபவர்கள் கருதுகின்றார்கள். நம் நிலவுலகத்தில் வரம்புகளுக்கு உட்பட்டுத் தொழில்கள் செய்கின்ற கருத்தாக்களைப்போல் அல்லாமல் கடவுள் தான் விரும்பிய வண்ணமே மக்களுக்கு வேண்டிய எல்லாத்தொழில்களையும் செய்கின்றாராம்.

இத்துணை மேம்பட்ட கடவுள் மக்களுக்கு அறிவுச்சட்டம் ஒன்று இன்றியமையாது வேண்டப்படும் என்று நினைத்தால், முன்னுள்ள உலகப்பொருளை உடம்பு, கருவி, இடம், நுகர் பொருளாகத் தம் நினைப்பு மாத்திரத்தில் எவ்வாறு ஆக்கித்தந்தாரோ, அது போல் அவர் உயிர்களுக்கு உள்ள இயற்கை அறிவை அவைகளுக்கு வேண்டிய வசதிக்குத் தக்கபடி விளம்பரப்படுத்துவதும் அவர் தம் நினைப்பு மாத்திரத்தில் நிகழ்வித்துக் கொள்ள முடியாத ஓர் அரிய செயல் அல்ல.

இனி எந்த வேதங்களைக் கடவுள் உண்டாக்கினார் என்று சொல்லி வரப்படுகின்றதோ அவைகளின் வரலாற்று முறையை ஆராயுமிடத்து அவைகள் எழுதப்பட்ட புத்தக உருவில் அமைந்து வெளிப்பட்டதாகத் தோன்ற வில்லை. மக்களின் காதுவழியாக முன்னுள்ளவர் சொல்வதைப் பின்னுள்ளவர் கேட்டுக்கேட்டு நெஞ்சத்தில் இருத்தி வந்த வகையில், மக்கள் நினைவிலேயே வேதங்கள் இருந்து பயிலப்பட்டு வந்தனவாகக் காணப்படுகின்றன. இந்த முறையைப்பற்றி மேலே சென்றால் கடவுளும் தம் வாயினாலேயே வேதங்களைச் சொன்னவராகக் கருதப்பட்டு வருகின்றதே யன்றி எழுதப்பட்ட புத்தக உருவில் வேதங்கள் அமைத்துக் கொடுக்கப்படவில்லையென்பது சொல்லாமலே போதரும்.

கடவுள் திருவாயில் நின்றும் வேதங்கள் வெளிப்பட்ட காலத்தில் எந்த மக்கள் அவைகளைக் கேட்டுத் தங்கள் உள்ளத்தில் ஒரு சிறிதும் குறைவுபடாமல் வாங்கி வைத்திருந்தார்கள் என்று கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் காண்கின்றிலம். எனினும் இஃது குறிக்கத்தக்கதொன்றுளது. அது என்னவெனில் வேதங்களிலேயே வேதங்களைச் செய்த ''கிரந்தகர்த்தாக்களின்'' பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. வேதங்கள் கடவுளாலேயே அருளிச் செய்யப்பட்டவைகள்

என்று சொல்பவர்கள் வேதங்களின் பல பகுதிகளில் ஆக்கி யோர் பெயர்கள் அங்கங்கே குறிக்கப்பட்டு வருவதற்கு என்ன சமாதானம் கூறி வருகின்றார்கள் என்பதைப்பற்றி ஆராய்தல் வேண்டும். வேதங்கள் இந்தக் கிரந்த கருத்தாக்க ளின் பரம்பரையிலேயே ஓதப்பட்டு வந்தனவென்றும் அவர் களின் பெயர்களை உபசாரமாக ஆக்கியோர் பெயர்களாகக் குறிக்கப்பட்டன வென்றும் சொல்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் சொல்லிவருவது வேதங்கள் இறைவன் வாய்மொழி யென்று சொல்லி வருகிற கொள்கைகள் நிலைபெறுவதற்கே யன்றிப் பிறிதில்லை. இனி வேதங்கள் முன்னைய காலத்தில் எழுதப்படுதற்கு இல்லாமலும் பிற்காலத்தில் எழுதப்பட்ட புத்தக உருவில் அமைத்துக்கொள்ளவும், ஏற்பட்டுவிட்டன. எழுதப்படாத காலத்தெல்லாம் இறைவன் வாய்மொழியாகிய வேதங்கள் மக்கள் மனநினை வென்னும் புத்தகத்தில் தங்கிக் கிடந்தன. அவைகள் பிற்றைக்காலத்தில் மனநினை வென்னும் புத்தகத்தை விட்டுப் பெயர்த்து 'இருடியர்' எழுதிய புத்தக உருவங்களில் வெளிப்பட்டன. இடையில் இன்னும் ஒன்று நினைக்கத்தக்கது. அதாவது வியாச பகவான் வெளிப்பட்டுச் சிதறுண்டு கிடந்த வேதங்களைப் பொறுக்கிச் சேர்த்துத்தொ கை நூல்களாகஆக்கி இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்என்ற புதுப்பெயர்களோடுவேதங்களைவெளிப்படுத்தியதாகவும் புரா ணங்கள் பயின்றபெரியோர்கள் என்பவர்கள் கூறுகின்றார்கள். வேதவியாசர் தொகுத்த நான்குவேதங்களும், இருடிகள்மரபில் வாய்மொழியாகவந்தவேதங்களும், இறைவன் மக்கட்குமுதன் முதல் திருவாய் மலர்ந்தருளியதாகச் சொல்லப்படும் வேதங்க ளும் எல்லாம் வேறுபாடு ஒரு சிறிதுமின்றி ஒத்தப் பிரதிகளே என்று எப்படிக் கூற இயலும்? எல்லாம் வல்ல இறைவன் எழுதிய புத்தக உருவிலேயே வேதங்களை அருளியிருப்பாரா னால் வேதங்கள் சிதறுண்டு கிடக்கவும், அவைகளைப் பின் ஒருவர் தோன்றி வேதப் பெயர்களையே மாற்றிக் கொடுக்க வும் இடமில்லாமல் இருந்திருக்குமன்றோ? இது நிற்க.

இனி வேதங்கள் இறைவனால் அருளப்பட்டது உண் மையே என்றால் இவைகள் கட்டளை உரைகளாக "இது செய்க, இதுசெய்யற்க" என்ற வகையிலாவது அல்லது உலகு, உயிர், கடவுள் கட்டு, வீடு என்பனவற்றின் இயல்புகளை விரித்து ஓதுகின்ற தத்துவ நூல்களாக மட்டும் இருக்க வேண்டும். இந்தத் தன்மைகளோடு ஆண்டவனை நோக்கி வழிபடும் வணக்கப்பாடுகளும் அவ் வேதங்களிற் காணப்படு மானால் வேதங்களைச் செய்த கடவுளே எந்தக் கடவுளை

நோக்கித் தம் குறை தீர்த்தற்கு வணங்கினார் என்று வினவுவதற்கு இடமாகும் அன்றோ? வேதங்களுள் வணக்கப்பாடுகள் காணப்படுமோனால் வேதங்களை இறைவன் செய்ததாகச் சொல்வது எவ்வாறு பொருந்தும்? மக்கள் தம் குறைகளைச் சொல்லி ஆண்டவன் அருள் பெறுவதற்காகப் பாடுகின்ற பாட்டுகள் மக்கள் வாய்மொழிப் பாட்டுக்களேயாமல்லது வேறு கடவுள் பாட்டென்று எங்ஙனம் கூற இயலும்? ஆகவே வேதங்கள் கடவுள் அருள் வழி நின்ற பெரியோர்களாகிய நிறைமொழி மக்கள் என்பவர்களின்வாய்மொழியென்று கொள்ளவேண்டுவதல்லது கடவுள் வாய்மொழியென்று கொள்வதற்கு இடமில்லையன்றோ?

இனி உலகியல் முறையில் அரசர்களது கட்டளைச் சட்டங்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன வென்பதைச் சிறிது கூர்ந்து நோக்கத் தக்கது. அர ர் அதிகார வியாபகத்துள் அடங்கி நிற்கும் பெரு மக்களே ட க்கட்கு வேண்டிய சட்டங்களைத் தாமே ஆராய்ந்து உண் டுபண்ணி அரசர்கள் ஒப்பம் பெற்று அச் சட்டங்களையே ரச சட்டங்களாக வெளிப்படுத்துகின்றனர் என்பதை எ நம் நன்கு அறிந்திருத்தல் கூடும்.

பெரு மக்களால் ஆராய்ந்து உண்டுபண்ணப்பட்ட சட்டங்கள் அப் பெரு மக்கள் பெயரால் வெளிவாராது, அரசர் பெயராலேயே வெளிவருகின்ற உண்மையை அறிபவர்கள் வேதங்கள் கடவுளாலேயே ஆக்கப்படல் வேண்டுமென்பது இன்றியமையாததாகக் கருதமாட்டார்கள். உலகத்திற்காகக் கடவுள் தாம் செய்கின்ற வல்லாத் தொழில்களையும் தம்மால் அதிகாரம் பெற்ற ஆன்மாக்களைக்கொண்டே செய்விக்கின்றார் என்று அருள் நூல் ஆசிரியர்கள் என்பவர்கள் கூறுகிறார்கள். ஆகையால் இந்த உலகத் தொழில்கள் சம்பந்தப்பட்டவரையில் கடவுள் என்பவர் தாமே கருத்தாவாகவிருந்து எந்தத்தொழிலும் செய்கின்றார் என்று சொல்வதற்கிடமில்லை. வேதங்கள் கடவுள் நேரிலேயே திருவாய் மலர்ந்தருளினார் என்றாவது அல்லது வேதப் பொருள்களைச் சொற்றொடர் மாலைகளாக எடு எழுத்தாணி கொண்டு எழுதி ஆக்கிப் புத்தக உருவில் அமைத்துக் கையில் எடுத்துக்கொடுத்து விட்டார் என்றாவது சொல்வது பல வினாக்களுக்கு இடம் தருகின்றதன்றோ?

கடவுள் வேதங்களைத் தம் திருவாயினாற் சொல்லும் பொழுது கேட்டுக்கொண்டிருந்தவர் யாவர்? சொல்லும்

பொழுது முழுவதையும் ஒரே முறையில் இடைவிடாது சொல்லி விட்டனரா? கேட்டுக்கொண்டிருந்தவர்கள் கடவுள் சொன்ன முழு வேதத்தையும் ஒரே முறையில் வாங்கி உள்ளத்திலேயே அமைத்துக்கொண்டனரா? கேட்டுக்கொண்டவர்களே வழி வழியாக வாய் வழியாய் ஓதிவந்து பின் ஒரு காலத்தில் எழுத்துப்புத்தக உருவத்தில் அமைத்துக்கொண்டனரா? முதன் முதல் ஆண்டவனிடத்தில் வேதங்களைக் கேட்கும்பொழுதே கேட்டுக்கொண்டவர்கள் ஏன் எழுதிக் கொள்ளவில்லை? அப்பொழுது எழுத்துக்கள் வரிவடிவத்தில் அமைக்கப்படாமல் ஒலிவடிவத்தில் மட்டுமே இருந்தனவா? ஒலி உள்ளயன்றே ஒலிக்கு வரிவடிவமும் உண்டென்று கொள்பவர் கருத்துக்கு வரிவடிவம் பின் வந்ததென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? இனிச் சொற்றொடர் மாலையாகவே கூறினார் என்றால் எந்த மொழியிற் கூறினார் என்று கேட்கவேண்டி வருகின்றது. ஏதாவது சொற்றொடர் மாலையாக கடவுள் சொல்லியிருந்தால் கேட்டுக்கொண்டவர்கள் எந்தமொழி தெரிந்தவர்களாக அப்பொழுது இருந்தார்களோ அந்த மொழியிலே தானே கடவுள் வேதங்களைச் சொல்லியிருத்தல் வேண்டும்? கடவுள் தந்ததாக எடுத்துக்காட்டப்படுகிற இந்த நான்கு வேதங்களும் எந்த மொழியில் இப்பொழுது காணப்படுகின்றனவோ அந்த மொழி இப்பொழுது பேசப்படுகிற மொழியாகக் காணப்படவில்லையே. வேதத்தை ஓதி வந்தவர்கள் பேச்சு மொழி மாறிற்றோ, அல்லது கடவுள் தந்த வேதமொழி மாறிற்றோ, என்னென்று கூறுவது? மக்கள் பேச்சு மொழியிலேயே வேதங்களைக் கடவுள் அருளியிருக்க வேண்டுமென்பது உண்மையேயானால் வேதமொழியாகிய ஆரிய மொழியையே மக்கள் பேசிவந்தவர்களாக வேண்டும். பேச்சு வழக்கில் நின்று ஆரிய மொழி எப்பொழுது வீழ்ந்து விட்டதோ அப்பொழுதே மற்றொரு மொழி பேச்சு வழக்கிற்கு வந்திருத்தல் வேண்டும். பேச்சு வழக்கிற்கு வந்த மற்றொரு மொழியில் வேதங்களை ஏனோ மொழிபெயர்த்துக் கொள்ளவில்லை? அப்பொழுதும் கடவுளே ஒருவர் வந்து வேதங்களை மொழிபெயர்த்துத்தந்து போதல் வேண்டுமென்று மக்கள் வாளா இருந்தனரா? அல்லது முதன் முதல் இறைவன் தந்த ஆரிய மொழியில் நின்றும் வேதங்கள் மாற்றிக்கொள்ளப்படாமல் மறைந்த மொழியாய்ப் புறத்தார்க்குப் புலனாகாமல் இருக்கவேண்டுமென்று வேதிய மக்கள் நினைத்தனரா? இறைவன் ஆரிய மொழியிலேயே வேதங்களைத் தந்தனர் என்று எண்ணுகிற மக்கள் ஆரிய மொழி பேச்சு வழக்கில் நின்றும் இறந்துபட நேர்ந்தபொழுது

ஆரிய வேதம் எப்படி மக்கட்குப் பயன்படும் என்று நினைத்தார்கள்? சில மக்களே வேதங்களைப் படித்துக் கொண்டு அவைகள் தம்மவர்க்கே உரியனவென்று தம் நலம் பாராட்ட முயன்று தங்கள் குறுகிய நோக்கத்தை வெளிப் படுத்திக் கொண்டதேயன்றி வேறென்ன? பல மக்கட்கும் வேதங்கள் பயன்பட வேண்டுமென்று நினைத்திருந்தால் பல மக்களும் பேசுவதற்கு இடையிலே ஏற்பட்ட பேச்சு மொழி யிலே வேதங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கவேண் டுமன்றோ? இவைகளையெல்லாம் கூர்ந்து நோக்கு மிடத்து வேதங்களின் வரலாற்றின் உண்மையைப் பற்றியும் வேதங்கள் தங்கட்கே உரியனவென்று சொல்பவர்களின் குறு கிய நோக்கத்தைப்பற்றியும் ஐயுறவேண்டியேற்படுகிறது. பல நூற்றுக்கணக்கான பேச்சு மொழிகள் இருக்கின்ற ஒரு நாட்டில் பேச்சு வழக்கில் இல்லாத ஆரிய மொழியில் அறிவு

சினிமா நடிகர்களின் வாரச்சம்பளம்
இந்தியாவில் யாருக்காவது உண்டா?

கிரேடா கார்போ	வாரத்திற்கு	1800	பவுன்கள்
மாரிஸ் ஷவாலியர்	,,	1500	,,
கான்ஸ்டன்ஸ் பென்னெட்	,,	1400	,,
ஜான் பாரிமோர்	,,	1300	,,
ரிச்சார்டு பார்த்தெல்மெஸ்	,,	1200	,,
நார்மா ஷீரர்	,,	1200	,,
ஆன் ஹார்டிங்	,,	1200	,,
வாலஸ் பீரி	,,	1000	,,
வில்லியம் பவல்	,,	900	,,
ஜான் கிராபோர்டு	,,	800	,,
ஜேனெட் கேனர்	,,	700	,,
எட்வர்ட் ஜி. ராபின்ஸன்	,,	600	,,
ஜேம்ஸ் காக்னே	,,	560	,,
கேரி கூப்பர்	,,	260	,,
வாரன் வில்லியம்	,,	250	,,

நூல்களாகிய வேதங்கள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் இன்னதென்று அறியக்கூடவில்லை. வெவ்வேறு மொழிகள் பேசி வருகின்ற பல மக்களும் வேதநூற்பொருள்களை அறிந்துகொள்ள வேண்டுமென்று கருதியோ, அல்லது வேதங்களில் காணப்படுகிற கொள்கைகளும் கருத்துக்களும் எல்லா மக்கள் உணர்விற்கும் பொருந்துமாறு இல்லையென்பது கருதியோ, எல்லா மக்களும் பேசுகின்ற எல்லா மொழிகளிலும் குறித்த நான்கு வேதங்களும் அமைக்கப்படவில்லை. வேறுபாடின்றி எல்லா மக்களிடத்தும் இரக்கம் வைக்கும் ஒரு கடவுள் எல்லா மக்கட்கும் பயன்படாத அறிவு நூல்களை முன்னொரு காலத்தில் அமைத்தார் என்பது கடவுளின் இறைமைக் குணத்திற்கு இழுக்காகுமன்றோ? ஆகவே கட்-

உலகத்தின் ஐஸ்வரியவான்கள்.

1. எட்செல் போர்டு (அமெரிக்கர்)
2. ஹென்ரி போர்டு (அமெரிக்கர்)
3. எட்வர்ட் டி. ரோத்ஸ்சைல்டு (பிரான்சு)
4. டியூக்-ஆப்-வெஸ்ட் மினிஸ்டர் (பிரிட்டிஷ்)
5. வில்லியம்-ஆப்-ஹோஹென் ஜோலெர்ன் (ஜெர்மன்)
6. கெயிக்வார் ஆப் பரோடா (இந்தியா)
7. ஸர் பேசிம் ஜஹரூப் (கிரீக்)
8. சிமன் பாடினோ (பொலிவியன்)
9. லார்டு இவேயாக் (பிரிட்டிஷ்)
10. ஆகாகான் (இந்தியா)
11. ஹைதராபாத் நைஜாம் (இந்தியா)
12. ஜி. டி. வெண்டல் (பிரஞ்சு)
13. ஜான் டி. ராக்பெல்லர் Jr. (அமெரிக்கர்)
14. ஜான் டி. ராக்பெல்லர் Sr. (அமெரிக்கர்)
15. லூயிஸ்-டிரேபஸ் (பிரெஞ்சு)
16. ஆன்டிரூ W. மெல்லான் (அமெரிக்கர்)
17. பிரிட்ஸ் திஸ்ஸென் (ஜெர்மன்)

டுப்பட்ட ஆற்றலுடைய மக்கள் நிலைக்குக் கட்டுப்படாதவர் என்று சொல்லும் கடவுளை இறக்கி எல்லைக்குட்பட்ட அறிவுப் பொருள்களை எடுத்தோதும் வரம்புபட்ட நான்கு வேதங்களைக் கடவுள் ஆரிய மொழியில் சொற்றொடர் மாலையாகப் பாடி ஒரு வகுப்பார்க்கே ஓதுதற்குரியனவென்று கொடுத்தும், மற்றைய வகுப்பார்க்கு அவைகள் உரியன அல்லவென்று ஒதுக்கியும் கடவுள் வேதங்களை அருளிச் செய்து விட்டார் என்று கூறுவது பகுத்தறிவுக்குப் பொருந்துமா என்று யோசித்துப்பாருங்கள்.

முன்னுள்ள இயற்கை அறிவையே மக்கள் தகுதிக்கேற்ப அவ்வப்போது வளம்படுத்தித்தருதலும் தரும்பொழுது வரம்புபட்ட ஆற்றல்களுக்குட்பட்டு ஏடுஎழுத்தாணி கொண்டு மக்கட்கு எழுதித்தரவேண்டுமென்பதின்றி மக்கள் அறிவினுட்கலந்து உணர்த்துதலும், உணர்த்தும் அறிவுரைகள் பெரு மக்கள் வாய்மொழிவழியே வரவேண்டுதலும் உலகியல் முறையில் மக்களால் ஆய்ந்துவரப்படும் அரசியற் சட்டங்கள் சிறப்பு நோக்கி அரசர் பெயரால் வெளிப்படுத்தல்போல, கடவுளை நம்பியமக்கள் அறிவிக்க அறியும் அறிவுரைகளும் அந்நம்பிக்கையால் ஆண்டவன் என்பவர் உரைகளாதலும் அவ்வறிவுரைகளும் மக்கள்பேச்சு மொழியில் அமைந்து வரவேண்டுதலும் அவ்வாறு இல்லாதது போனதால் குறித்த நான்கு வேதங்களின் வரலாற்று முறையில் ஐயப்பாடுகள் பிறத்தலும் கூடுமென்பவைகள் ஆராய்ந்து நோக்கதக்கன. இவைபோன்ற கருத்துக்கள் பெருமக்கள் ஆராய்ச்சிக்குஇலக்காக நிற்கின்றனவாகலான் இக்கருத்துக்களைப் பெருமக்கள் ஆராய்ந்து தத்தம் குறிப்புரைகளைப் பிறர்க்குப் பயன்படுமாறு வெளியிடுவார்களாக.

மணத்திற்கு முன்
டாக்டர் பரிசோதனை செய்துகொள்.

கியன்சூ என்ற சீன மாகாணத்தில் சமீபத்தில் சர்க்கார் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. அதன்படி மணம் செய்து கொள்ளப் போகும் மணமகன், மணமகள் இருவரும் ஒரு தக்க டாக்டரிடம் சென்று, தாங்கள் நல்ல தேகாரோக்கியத்துடனிருப்பதாக அநுமதிப் பத்திரம் பெற்றுக்கொண்டு வந்தால் தான் மணம் செய்து கொள்ளலாம்.

வியாதியஸ்தர்களும், பலஹீனமுடையவர்களும் திருமணம் செய்து கொள்வதற்கு அருகதையில்லை யென்பது இச்சட்டத்தின் கருத்து. ஏன் நம் நாட்டிலும் இம்மாதிரி ஒன்று கொண்டு வரக்கூடாது?

பிரிட்டிஷார் கட்டியாளும் பிரஜைகளில் இந்தியர்களே மெஜாரிட்டி.

பிரிட்டிஷார் கட்டியாளும் மன்பதையை நோக்கினால் அஃது ஒரு மனித மகா சமுத்திரமாய்த் தோன்றும். அதில் பெருந் தொகையினர் இந்தியர்கள்! அதிலும் பெரும் பகுதியினர் ஹிந்துக்கள்! இத்தகைய இந்துக்களை, ஏன்? இந்தியர்களை—ஒரு சிறு தொகையினராகிய பிரிட்டிஷார் அரசாட்சி செய்வது ஒரு விடுகதை போலிருக்கிறது. இதன் விளக்கத்தை கீழ் வரும் கட்டுரையில் காண்க:—

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகை நாற்பத் தொன்பதுகோடியே நாற்பத்தேழு லட்சத்து எழுபதாயிரம். இத் தொகையை கண்டம் வாரியாகப் பிரித்துக்கூறினால் ஒவ்வொரு கண்டத்திலும் அடியில் காணும் தொகை காணப்படும்:—

ஐரோப்பா	48,000,000
ஏஷியா	365,000,000
ஆப்ரிக்கா	60,000,000
வட அமெரிக்கா	10,400,000
மத்திய அமெரிக்கா	50,000
மேலை இந்தியத் தீவுகள்	2,000,000
தென் அமெரிக்கா	320,000
ஓஷியானியா	9,000,000
மொத்தம்	494,770,000

இந்த 49 கோடி சொச்சத்தையும் மதவாரியாக வகுத்து ஒழுங்கு படுத்தினால் அடியில் வருமாறிருக்கக் காணலாம்:—

ஹிந்துக்கள்	240,000,000
முஸ்லிம்கள்	100,000,000
கிறிஸ்தவர்	80,000,000

புத்தர்கள்	12,000,000
பேய் வணக்கம் செய்வோர்	12,000,000
சீக்கியர் } பார்சிகள் } ஜெயினர்கள் }	4,000,000
யூதர்கள்	750,000

(மீதமுள்ள ஜனங்கள் தனித்தனிக் குட்டி மதத்தைச் சார்ந்தவர்கள்.)

மேலே சொன்ன 49 கோடிப்பேர்களில் 35 கோடிப் பேர்கள் இந்தியர்கள்! எனவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மெஜாரிட்டியான (பெருந்தொகையினரான) மக்கள் இந்துக்களாவார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் முதல் அடிமைகளாயிருக்கின்றனர்!

வேல்ஸ், ஸ்காட்லாந்து, இங்கிலாந்து ஆகிய மூன்று தேசங்களிலும் உள்ள பிரிட்டிஷார் தொகை 450 லட்சம். இந்நான்கு கோடிப்பேர் 35 கோடி இந்தியரை ஆள்கின்றார்கள் என்றால் ஆச்சரியமல்லவா? நிற்க,

இச்சிறு தொகையினரான ஆங்கிலேயர்கட்கு பாதுகாப்புகளோ துணையோ வேண்டுவதில்லையாம். அவர்களுடைய வலிமை மிக்க லக்ஷணை, அறிவு, அவர்களது ஒற்றுமை, சுயேச்சை மனப்பான்மை என்பனவே அவர்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றி வருகின்றன. அவைகளே அவர்கட்கு சிறந்த பாதுகாப்புமாகும். இதுவாறும் அவர்கள் காப்பாற்றி வரும் சுதந்திர நிலைமை அவர்கட்குப் பெரிய துணையாக நின்று வருகிறது.

ஒரு தேசம் வலுவுடையதாக வேண்டுமானால் ஜனத்தொகை மட்டிலும் போதாது. சீனர்கள் ஜப்பானியர்களை விட எவ்வளவோ பெருந்தொகையினர்; என்றாலும் ஜப்பானியர்களோடு நெருங்கவும் முடிவதில்லை. ஜனத்தொகை ஓர் பலமாகவிருக்குமாயின் இந்தியர் இன்று அடிமைகளாயிருக்க மாட்டார்கள்!

இந்தியாவிலிருக்கும் 35 கோடி (சொச்சத்தில்) புதிய அரசியல் திட்டத்தின்படி பொதுத் தொகுதியை ஆக்கிநிற்கும் மக்கள் தொகை 25-கோடி 32-லட்சமாகும். இவர்கள் தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மெஜாரிட்டியான ஜாதியார். இவர்களில் இந்துக்கள் மட்டும் 23-கோடி 9-லட்சம் பேரிருக்கின்றனர். எனவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்துக்கள் தான் மெஜாரிட்டி என்று சொல்லவும் வேண்டுமோ?

(ஊ—ன்)

மேல் நாட்டு
(டாக்டர் வெஸ்டர்மார்க் புதிய நூல்.)

விவாகங்களும், ரத்துகளும் விவசாரங்களும், தகாதமுறைசேர்க்கைகளும்.

லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வெஸ்டர் மார்க் "மேல்நாட்டு நாகரிகத்தில் விவாகத்தின் எதிர்காலம்" என்ற நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அப் புத்தகத்தில், விவாகம், விவாகரத்து, விபசாரம், தம்பதிகளுக்குள் பொறாமை, ஆண்-ஆண் சேர்க்கை, பெண்-பெண் சேர்க்கை மற்றும் மணவாழ்க்கைத் துன்பங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி புள்ளி விபரங்களுடனும், பல உதாரணங்களுடனும், விளக்கி எழுதியிருக்கின்றார்.

விவாகரத்துகள் அதிகமாயுள்ள, நாடு ஒரு (வேளை ரஷ்யாவைத் தவிர்த்து.) அமெரிக்காவாம். அங்கு ஆறு விவாகங்களுக்கு, ஒரு விவாகரத்து நடைபெறுமாம். வெற்றியென்று சொல்லப்பட்ட திருமணங்களில், 100க்கு 28 புருஷர்களும் 24 மனைவிகளும் விப சாரம் செய்கின்றார்களாம்.

1200 கல்லூரி மாணவிகளில் 600 மாணவிகள் பெண் சேர்க்கையில் ஈடுபடுகின்றனராம்: 300 மாணவிகள் தாங்களாகவே தகாத முறைகளில் காம இஷ்டபூர்த்தி செய்து கொள்கின்றனராம். 100 விவாகமான தம்பதிகளில் 16 கணவர்களும், 26 மனைவிமார்களும் ஆண்—ஆண் சேர்க்கையிலும் பெண்—பெண் சேர்க்கையிலும் 18 வயதுக்குப்பின் கலந்தனரென்று அவர்களே ஒப்புக்கொண்டனராம்.

(ந—ஜீ)

முக்கிய கவனிப்பு.

"குடி அரசு" (வாரப்பதிப்பு)

"பகுத்தறிவு" (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,

மத இயல் புரட்டு,

பொருளியல் புரட்டு,

சமுதாய இயல் புரட்டு,

தேசிய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுய நலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல "தலைவர்கள்", மதாச்சாரியார்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேச பக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் ஏன்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்.

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3—0—0

பகுத்தறிவுக்கு ,, ரூ. 1—0—0

இரண்டு பத்திரிகைக்கும் சேர்ந்து

வருட சந்தா ரூ. 3—8—0

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

சிறந்த முறை! குறைந்த விலை!! நிறைந்த குணம்!!!

வியாபாரிகளுக்கு தக்ககமிஷன் கொடுக்கப்படும்.

மின்ன தைலம்

கை, கால், இடுப்பு, வலிகளுக்கும்.
நரம்புகள் சுளுக்கு, சதை பெரளுதல்.
அடி, காயம், தேள்கடி வாயுப்பிடிப்பு.
வாதம். நீர்க்கட்டு. முதலியவைகளுக்
கும் சஞ்சீவி போன்றது. குளிக்
கணக்கில் வலியுள்ள விடத்தில் நன்கு.
தேய்க்க குணம் தரும். விலை அணா 0.6.0

ஈ.வெ.த. வைத்திய சாலை ஈரோடு

ஒரு அவுன்சு புட்டி 1-க்கு
விலை அணா 0—6—0.

6 அணாவுக்கு வி. பி எடுப்பது
சிரமமாகுமாதலால் 9 அணா ஸ்டாம்பு
அனுப்பினால் ஒரு புட்டி அனுப்பப்படும்.

முக்கியமான புஸ்தகங்கள்.

குறைந்த விலை

இராமயண ஆராய்ச்சி 1 முதல் 4 காண்டங்கள் சேர்த்து தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0.

கர்ப்ப ஆட்சி, புது ரஷ்யா, புராணங்கள் ஆகிய மூன்றும் ஒன்றாய் தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0.

தபால் சார்ஜ் அணா 0—4—0

மானேஜர்.—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வே. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0
அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.		
முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0
Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.		
நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0
அறிஞர் இங்கர்சால் எழுதியவை.		
மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	,,	0 3 0
அறிஞர் பிரமச்சாரி M. A., L. T, எழுதியவை.		
மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0
அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.		
மதப்புரட்சி	,,	0 4 0
தோழர் M. சிங்காரவேலு B. A., B. L, எழுதியவை.		
மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்	I-ம் பாகம்	0 6 0
ஷை	II-ம் பாகம்	0 5 0
அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை		
பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாஸனம்		0 4 0
ஷை	2-ம் பாகம்	0 4 0
தோழர் அ. இராகவன் எழுதியது.		
பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0
அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.		
ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ..	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.)		0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
25.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
29.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
34	நரகம் எங்கே?	0	2	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.